குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 18] விளம்பி ஆண்டு மார்கழித்திங்கள் 10—1—59 [இதழ் 2

தருமபுரம் ஆதீனம், திருநாவுக்கரசர் - சுந்தரர் நிலையங்களின் கட்டடத் திறப்புவிழா



சென்னை மாநிலக் கல்வி - நிதி அமைச்சர்,
கனம். திரு. சி. சுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்கள்,
திருநாவுக்கரசர் – சுந்தரர் நிலையங்களைத்
திறந்து வைத்தல்

ஆசிரியர்:- வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்
துணை ஆசிரியர்:- வித்துவான். முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

உட்பொருள்

பக்கம்

1.	மார்கழித் திங்களின் மாண்பு ...	77
2.	ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளுரை	80, 92, 125
3.	கனம். திரு. சி. சுப்பிரமணியம். பி.ஏ., பி.எல், அவர்களது திறப்புரை ...	82
4.	கனம். உயர்திரு. K. காமராசர் அவர்களது தலைமை உரை ...	89
5.	கனம். திரு. சி. சுப்பிரமணியம் பி.ஏ. பி எல்., அவர்களது தலைமை உரை ...	90
6.	கந்தபுராணப் போற்றிக் கலிவெண்பா ...	93
7.	முப்பொருள் விளக்கம் ...	97
8.	சிவாகமம் ...	99
9.	அன்பின் வெற்றி ...	103
10.	கம்பன் கண்ட கன்னித் தமிழ்நாடு ...	107
11.	மெய்ப்பொருள் ...	111
12.	சில திருத்தங்கள் ...	115
13.	விரதம் ...	120
14.	செய்திகள் ...	127
15.	எதிர்காலம் ...	136

பொங்கல் வாழ்த்து

திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தனார், திருவண்ணாமலை.

போங்கல் திருநாள்! எங்கணும் பெருநாள்!
மங்காச் செல்வம் மல்கிடும் நன்னாள்!
தங்கும் புகழ்மிகத் தரணியில் தழைத்திட
போங்கும் மக்களைப் புகழ்பெறச் செய்திட
ஓங்கிடும் பொன்னாள்! ஒளிவளர் மெய்ந்நாள்!
வாழிய நாடு! வாழிய மக்கள்!
வாழிய போங்கல்! வாழி வாழியே!

உ
குருபாதம்
வாழ்க உலகெலாம்!

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 18 | விளம்பி - மார்கழி 10—1—59 | இதழ் 2

உ
திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

மார்கழித் திங்களின் மாண்பு

எங்கும் எல்லாரும் விடியலில் இன்னருட் பாட்டொலி யைக்கேட்டு, உள்ளத்தில் அருள் வெள்ளத்தை நிரப்பும் பேறலரிய பேறு மார்கழித் திங்களில்தான் கிடைக்கின்றது. மார்கழியே ஆண்டு முழுதும் விளங்காதா என்று எண்ணு கின்றன தெய்வ சிந்தனை வாய்ந்த சீரிய உள்ளங்கள். இச் சுவை அன்றி வேறு எச் சுவையும் விரும்பாதன அவ் வுள்ளங்கள்.

தருமையாதீனத்தின் திருக்கோயில்கள் பலவற்றுள், திருவெம்பாவை மாநாடு நடந்தது. தருமையாதீனத்தின் ஒலிப்பதிவுத் தட்டுக்கள் இம் மாநிலத்தில் பல பல திருக் கோயில்களிலும் மற்றைய தெய்வ நிலயங்களிலும் பயன் படுத்தப்பெற்று வருகின்றன. எங்கும் இசை மயம் தெய்வ கீதம். திருவருட்பாடல். திருமுறைப் பண்ணொலி. திரு வெம்பாவை யொலி, திருப்பாவை யொலி, கேட்கலாமோ என்னும் செவிகளையும் துளைக்கும் கருணையொலி, எல்லோ ரும் புண்ணியரே ; யாவரும் பாவியரல்லர் என்னும் போது நோக்குடன் அநுமதி வேண்டாமல் செவிவழியாகச் சிந்தையுள் நுழைந்து தெய்வசித்தம் உண்டாக்கும் ஞானப் பாட்டொலி. அதன் பெருமையை அளவிடவல்லார் எவர் ?

தருமையாதீனத்தின் திருக்கோயில்கள் பலவற்றிலே திருப்பாவை, திருவெம்பாவை, திருமுறை மாநாடு நடந்தது. திருவிளநகர், திருப்பறியலூர், திருக்கடவூர், திருக்குவளை, திருக்குறுக்கை, திருத்துருத்தி (குத்தாலம்), திருச்சிராப் பள்ளி மலைக் ்கோட்டை (ஸ்ரீ மௌனமடம் கட்டளைச் சார்பில்) தாயுமானவர் கோயில், உய்யக்கொண்டான் திருக்கோயில், பேரளம், திரிபுவனம், திருப்பனந்தாள், சீகாழி, வேளூர் (வைத்தீசுவரன்கோயில்), மாயூரம் குமரக்கட்டளை, வள்ள லார்கோயில், விசுவநாதர்கோயில் முதலிய பல தலங்களிலே மாநாடு நடந்தது. 12—1—59 இல் திருவையாற்றில் நிகழ இருக்கின்றது. அங்கே தலைமைதாங்கி மாநாட்டை நடத் தித்தர இசைந்திருக்கின்றார்கள்; உயர்திரு. அ. உத்தண்ட ராமப்பிள்ளை B. A., B. L., I. A. S. அவர்கள். சீகாழியிலும், வேளூர் வைத்தீசுவரன்கோயிலிலும் அவர்கள் தலைமை யில்தான் மாநாடு மிகச் சிறப்புடன் நிகழ்ந்தன. இவ்வாண் டில், அவர்கள் பலதேவாலயங்களில் இத் திருவருள் நிகழ்ச்சி யில் கலந்துகொண்டு அன்பர்கள் எல்லார்க்கும் மிகுந்த மகிழ்ச்சியை விளைவித்தார்கள். தாமும் மிக மகிழ்ந்தார்கள். இது மிகவும் பாராட்டத்தக்கது என்று பலரும் பேசிக்கொண் டார்கள். இம்மாநிலம் முழுதும் இவ்வாண்டில் நிகழ்ந்துவரும் வண்ணம்இதற்கு முன்இல்லைஎன்றும் பேசிக்கொள்கின்றனர்.

இத்தனைச் சிறப்புக்கும் அவர்களுக்கு வழிவழியாக வாய்த்துள்ள தேய்வபக்தியே சிறந்த காரணம். அறநிலையப் பாதுகாவலராவோர் பலரும் அக் காரணத்தைப் பிறவியிலேயே பேற்றவர்களாயிருத்தல் வேண்டும் என்னும் உண்மை உண்மையே. உள்ளத்தோளி உலகில் வீசுவது உறுதி. திருக்கோயில்களின் ஆணையர் அனைவரும், அறநிலயப் பாதுகாப்பிற்கு அமைந்து விளங்கும் 'நல்லறங்காவலர்' அமைச்சர் கனம், உயர்திரு. எம். பக்தவத்சலம் B. A., B. L., அவர்களையும், உயர்திரு. A. உத்தண்டராமப் பிள்ளை B. A., B. L., அவர்களையும் உண்மையிற் பாராட்டுவது யாவரும் குறிக்கோள்ளத்தக்கது.

வாழ்க அறநிலையங்கள், வாழ்க திருவருட்பாக்கள், வளர்க தேய்வ சித்தமும் திருவடிக்கு அன்பும் நல்லறமும்.

சிறந்த திங்கள் வெளியீடு → குமரகுருபரன்

ஆண்டுச் சந்தா 1 — 50

இவ் வேளியீடு 9 ஆண்டுகளாகத் தோண்டுபுரிகின்றது. சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றினை எளிய நடையில் தேளியக்கோண்டு உலவுகின்றது. தருமையாதீனத்து முனி புங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமர குருபர சுவாமிகளின் திருப்பேயர் கோண்டு வேளிவருவதால் அவர்கள் அருளிய நூல்களின் ஆராய்ச்சி விளக்கமும் ஏற்றுத்திகழ்கிறது. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் ஆணையின் வண்ணம் இவ்விதழ் சைவமணம் கமழ்கிறது. எல்லோரும் பாராட்டிவரும் இம்மணத்தை முகர்ந்து பயனடைக.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்,

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தரும ஆதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள்

25—12—58 குருவாரத்தில்

திருநாவுக்கரசர், சுந்தரர் நிலையங்களாகிய

புதிய கட்டடத் திறப்புவிழாவில் வழங்கிய

அருளுரை

நம் அன்பர் கனம். திரு. C. சுப்பிரமணியம் அவர்கள் எண்ணம், பேச்சு, நடக்கை மூன்றும் ஒன்றுபட்ட வாழ்க்கையை உடையவர். மொழி பல உணர்ந்தவர். கல்வியிற் சிறந்து, ஒழுக்கத்தில் மிகுந்து, இரக்கம் பொறுமை முதலிய குணங்கள் நிறைந்து விளங்குபவர். எல்லாராலும் விரும்பப் பெறும் இனியர். என்றும் எவர்க்கும் எங்கும் இனியனவே சொல்லியும், செய்தும், செய்வித்தும் வரும் ஏற்றம் உற்றவர். அவரை நாடெலாம் நன்கு தெரிந்தவாறே, நாடனைத்தையும் தெரிந்துள்ளவர். பன் முறையும் அமைச்சராகி நாட்டுக்கு நலஞ்செய்யும் பெருந் தகைமை மிக்கவர் என்பதை உலகே அறிந்திருக்கின்றது. மக்களுக்குக் கிடைத்த நிதிபோன்றவர் ஆதலின் அவரை நிதி அமைச்சராயும், கற்றதனுலாய பயனைப்பெற்றும் சபை தோறும் எடுத்துரைத்தும் வருபவர் ஆதலின் கல்வியமைச்ச ராயும் நம் மாநிலம் கொண்டு பெருமை உறுகின்றது. அத்தகைய மாண்பு பல வாய்ந்த அவர்கள் நற்கையால் வெண்பொற் ருழ்க்கோல்கொண்டு, புதிய இரண்டு நிலையங்க ளாகிய கட்டடத்தைத் திறந்து வைப்பது சாலப் பொருத்தம் உடையது. எல்லாவற்றிலும் பெரிய சாந்தமே உயிர்களின் விருப்பம். அந்தச் சாந்தத்தைப்பெற அதில் அநுபவம் உடைய அருளாளர்கள் துணையே சாதனம். அதனுல் சாந்த

நிலையத்தில் தோடங்க அருளாளர்கள் திருப்பெயர்களால், மெய்கண்டான் நிலையம், அருணந்தி நிலையம், மறைஞான சம்பந்தர் நிலையம், உமாபதி நிலையம், திருநாவுக்கரசர் நிலையம், சுந்தரர் நிலையம் ஆகிய நிலையங்கள் ஆறும் விளங்குகின்றன. இத் திருப்பெயர்களுக்கு உரிய அருளாளர்கள் சாத்திரமும் தோத்திரமுமாகிய உண்மை நூல்களை உலகிற்கு வழங்கிய ஆசிரியர்கள் ஆவர்.

இப்போது கல்லூரிக்கு இடமாகி, மாணவர்கள் சிந்தனையைச் செம்மைப்படுத்திவரும் இந்நிலையங்கள் கல்லூரிக்குத் தனியிடம், உண்டான பின்னும், இங்குத் தங்கும் அன்பர்களுக்குச் சிவஞானச் சிந்தனையை வளர்க்கப் பயன்படும்.

நம்முடைய நாட்டில் எதைத் தோட்டாலும், எதைச் செய்தாலும், அதிலே தெய்வ சிந்தனையோடுதான் ஈடுபடுவது வழக்கம். இந்தப் பழைய பண்பாட்டினடிப்படையில்தான் குடும்பம், முதலியன நம் நாட்டில் விளங்குகின்றன. காந்தியடிகள் இந்தப் பழைய பண்பாட்டின் அடிப்படையில்தான் தம் நேறி வகுத்தார்கள். பாரதப் பண்பாடாகிய கடவுள் நேறிக்கு மாறுததாக உள்ளதே காந்தீயம். முன்பு நம்முடைய நாட்டில் அரசியலில் பங்கு கோண்டவர்கள் ஆத்மீக விஷயத்திலும் ஈடுபட்டவர்களாக இருந்தார்கள். ஆத்மீக விஷயங்களில் சிறந்து விளங்கியவர்கள் அரசியலில் பேரும் பங்கு கோண்டவர்களாக அமைந்திருந்தார்கள். இந்த வகையிலே காந்தீயத்தில் அழுத்தமான உறுதிகோண்டு அந்நேறி பிறழாதோழுகும் நேர்மை நம் அன்பர் திருவாளர் அமைச்சர் அவர்களுக்கு உண்டு. ஆத்மீக விஷயங்களிலும் அரசியலைப்போலவே பங்கு கோண்டு உயர்ந்து நிற்கும் பேரியவராக இவர்கள் விளங்குதல் நம்முடைய பேருமகிழ்விற்கு உரிய ஒன்றாகும்.

செந்தமிழ்ச் சோக்கர் திருவருளால் இவ்விழா இனிது நிகழ்க! திறப்பாளர் நீடு வாழ்க! விழாவிற்கு வந்த நல்லோர் பலரும் நன்கு வாழ்க! வாழ்க உலகேலாம்!

தருமபுர ஆதீனம்

தருமபுர ஆதீனம்

திருநாவுக்கரசர், சுந்தரர் நிலையங்களைத் திறந்துவைத்த

சென்னை மாநிலக் கல்வி & நிதி அமைச்சர்

கனம், திரு. சி. சுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., அவர்கள்

ஆற்றிய

திறப்புரை

இந்தக் கட்டிடத்தை வெகு மகிழ்ச்சியுடன் உங்களுடைய நல்லாசியுடன் திறந்து வைத்திருக்கின்றேன். கடவுள் நம்பிக்கை, கடவுள் பக்தி, கல்வி பெருகுவதற்காக இங்குச் செய்துவரும் முயற்சிகள் எல்லாவற்றாலும் நம் இளைஞர்கள் நல்ல பயன் பெறுவார்கள்.

இன்றைக்கு உலகத்திலேயே விஞ்ஞான அறிவு மேலும் மேலும் வளர்ந்துகொண்டே இருக்கிறது. ஒரு நூறு வருஷங்களிலே நடந்த மாறுதல்கள் இப்பொழுது பத்து வருஷங்களிலே ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு வருஷத்துக்குள்ளாக இதுவரை நடந்த மாறுதல்களைவிட அதியற்புதமான மாறுதல்கள் ஏற்படுவதற்குரிய சின்னங்கள் தோன்றிக்கொண்டே யிருக்கின்றன. மனிதன் இயற்கை ரகசியங்களை மேலும் மேலும் கண்டுபிடித்து அச்சக்திகளை யெல்லாம் வெவ்வேறு வழிகளில் பயன்படுத்துவதற்கு யோசித்துக்கொண்டிருக்கிறான். அறிஞர்கள் எல்லாம் அதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சக்தியின் வளர்ச்சியின் காரணமாக மனித குலத்துக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கிறதா? சிந்தித்துப் பார்ப்போமானால் பல நன்மைகளோடுகூடப் பல தீங்குகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு ஏற்பட்டுள்ள தீங்குகள் மட்டும் அல்ல. மனிதனை நோக்கி யிருக்கக்கூடிய பேராபத்தையும் நாம் இன்றைக்கு உணர ஆரம்பித்திருக்கின்றோம். அணுசக்தி ஆராய்ச்சியில் ஏதோ ஒரு சக்தியை

நாம் சிருஷ்டித்துவிட்டதாக எண்ணலாகாது. இன்றைக்கு விஞ்ஞானத்துறை முன்னேற்றம் எல்லாம் மனிதனுல் ஒரு புதிய சக்தியை உருவாக்கியதாகா, இயற்கையிலே புதைந்து கிடந்து அறிவுக்கு எட்டாத முறையிலே இருந்துவந்த சக்திகள் நம் அறிவுக்கு எட்ட ஆரம்பித்திருக்கிறதேயொழிய புதிதாக உண்டாகவில்லை. இன்னும் நம் அறிவுக்கு எட்டாத சக்திகள் ஏராளமாக இருக்கின்றன. எல்லையற்றிருக்கின்றன.

ஆகவேதான் விஞ்ஞான வளர்ச்சியால் மனிதனுக்கு நான் இதைச் சாதித்துவிட்டேன் இதைச் சாதித்துவிடுவேன் என்ற ஆணவம் பெருகிக்கொண்டிருந்தது. இப்பொழுது ஒரு எல்லையை மீறி ஆணவம் குறைந்து எப்படி இந்தச் சக்தி ஏற்பட்டது? யார் இதற்கு மூலகர்த்தா என்பதைப் பற்றி யெல்லாம் யோசிக்க ஆரம்பித்திருக்கிறோம்.

இவ்வளவு சக்தியும் இன்றைக்கு மனிதனுடைய நன்மைக்குப் பயன்படுகின்ற அதற்குப் பதிலாக மனிதனை அழிப்பதற்கு - மனித குலத்தையே நாசமாக்குவதற்கு வளர்ந்துகொண்டே போகின்றன. அறிஞர்கள் எல்லோரும் இதைப்பற்றிச் சிந்தனைசெய்யவும் ஆரம்பித்திருக்கிறார்கள் அதன் காரணமாகத்தான் இன்றைக்கு விஞ்ஞான ஆராய்ச்சி யாளர்கள் விஞ்ஞானத்திலேயே நம்பிக்கை கொண்ட அவர் களும்கூட இந்த விஞ்ஞானம் மட்டும் மனிதனுக்கு நன்மை பயக்குமா? என்பதைப்பற்றித் தயங்க ஆரம்பித்திருக் கின்றார்கள். இன்றைய உலகப் பெரியவர்கள் எல்லோரும் இந்த விஞ்ஞானமட்டும் போதுமா? இதன் மூலமாக நாட்டுக்கு நன்மை யேதுவும் ஏற்பட்டுவிடாது. ஆகவே இன்றைக்கு (ஆத்மீக) மெய்ஞ்ஞானமும் அவசியம் என்பதை உணர ஆரம்பித்திருக்கிறார்கள். சமீபத்திலே நமது மதிப்பிற்குரிய பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அவர்கள் மாணவர் களுக்கு நிகழ்த்திய உரையை நீங்கள் படித்திருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

வேறும் விஞ்ஞானம் மட்டும் போதாது ஆத்மீகத் துறையிலும் வளர்ச்சி ஏற்படுகின்ற காலத்தில்தான் உண் மையான சமன் ஏற்பட்டு அதன் காரணமாக உலகத்தில்

மக்கள் நன்மை எய்துவார்கள் என்கின்ற கருத்தை இன்று வலியுறுத்த ஆரம்பித்து இருக்கின்றார்கள். இந்தியா உலகுக்கு ஏதாவது வழி காட்டியாக இருக்கமுடியுமானால் அந்தப் பொறுப்பு நமக்கு அதிகமாக ஏற்பட்டு இருக்கிறது! அது எந்தத் துறையில் வழிகாட்டமுடியும் என்று சொன்னால், வெறும் விஞ்ஞானம் மட்டும் போதாது, அது மட்டும் இருந்து மக்களிடையே வறுமையும் நோயும் இருக்குமானால் அதனால் பயன் என்ன? விஞ்ஞானமும் இருக்கவேண்டும் மெய்ஞ் ஞானமும் இருக்கவேண்டும்! இரண்டிற்கும் ஒரு சமன் ஏற்பட்டு அதன்மூலமாக மக்கட்குப் பெரும் நன்மை ஏற்படக் கூடிய ஒரு முறையிலே சமுதாயத்தை நடத்திச்செல்ல வேண்டும்.

இன்று நடத்திச்செல்லக்கூடியபாதையை மற்றவர்களும் உணர்ந்து எல்லோரும் பின்பற்றவேண்டும் என்கின்ற முறையிலே நாம் எல்லோரும் முயற்சிசெய்யவேண்டும். அப்பேர்ப்பட்ட பெருமுயற்சி செய்யவேண்டும் என்று சொன்னால் மெய்ஞ்ஞானத்தைத் தவிர்த்தாலும் நாம் அதைச் செய்துவிட முடியாது. விஞ்ஞானத்தைத் தவிர்த்தாலும் நாம் வழிகாட்டிகளாக இருக்கமுடியாது. இரண்டிற்கும் ஓர் இணைப்பு ஏற்படுத்தி இந்த இணைப்பின் மூலமாக ஒரு புதிய வழியை நாம் வகுத்துக் காட்டவேண்டியது மிகவும் அவசியம். அதற்காகத்தான் பெருமுயற்சிசெய்துவருகிறோம். விஞ்ஞான வளர்ச்சிக்காகப் பல்வேறு நிலையங்களை - பல்வேறு கல்லூரிகளை - பல்வேறு பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலமாக முயற்சிசெய்து வருகிறோம். இன்று விஞ்ஞான வளர்ச்சிக்காக முயற்சி நாம் எடுத்துக் கொண்டு இருக்கக்கூடிய அதே சமயத்திலே மெய்ஞ் ஞானம் வளர்வதற்கும் முயற்சிகள் செய்யக் கடமைப்பட்டி ருக்கிறோம். அதற்குத் தனியாக வைத்து அந்த மெய்ஞ் ஞானத்தை வளர்க்கமுடியுமா? விஞ்ஞானம் வளர்க்கும் இடத்திலேயே மெய்ஞ்ஞானம் வளர்வதற்கு ஏற்பாடு செய்தால்தான் உண்மையான இணைப்பும் உண்மையான வளர்ச்சியும் அதில் ஏற்படமுடியும், அந்த முறையிலே

நம்முடைய கல்வித்திட்ட முறையிலும்கூட நாம் யோசனே செய்து பார்த்து எந்த முறையால் நமது கல்வித்திட்டம் அமையவேண்டும் என்று ஒரு முடிவு செய்யக்கூடிய கட்டத்தில் இருக்கின்ருேம்.

பலர் நினைக்கின்ருர்கள், நம் அரசாங்கம் மதச்சார்பற்ற அரசாங்கம் என்று. அதை ஆங்கிலத்திலே (Secular state) என்று சொல்லுகிருர்கள். அதன் காரணத்தினுலேயே இது மதச்சார்பற்றது என்று சொன்ன உடனேயே மதத்திற்கும் இத்றகும் - இந்த அரசாங்கத்திற்கும் எந்தத்தொடர்பும் இல்லே என்று சொன்ன உடனேயே அரசாங்கத்தில் இருக்கின்றவர்களுக்கும் மதத்திற்கும் தொடர்பு இருக்கக்கூடாது என்ற முறையிலே இப்படி இது நீடித்துக்கொண்டே இருக்கிறது, சேக்குலர் ஸ்டேட் (Secular state) என்று சொன்ருலே அதனுடைய அர்த்தம் Irrelegious state அல்ல! மதத்திற்குப் புறம்பான ஒரு அமைப்பு அல்ல. எல்லா மதங்களுக்கும் பொதுவான அமைப்பு என்கின்ற முறையில் தான் சேக்குலர் ஸ்டேட்டே யொழிய (Secular state) மதத்திற்குப் புறம்பாக அமைந்திருக்கக்கூடியதல்ல; எம்மதத்தினராயினும் அம்மதத்தில் வழிபடுகின்றவர்கள் எல்லோர்க்கும் பூர்ணமான சுதந்திரமும் சகல வாய்ப்பும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு, மதத்தின் காரணமாக ஒருவர்க்கு உயர்வு ஒருவர்க்குத் தாழ்வு என்ற முறையில் இல்லாமல் சமவாய்ப்பும் சமசந்தர்ப்பமும் கொடுக்கக்கூடிய முறையில் அமைந்திருப்பதுதான் சேக்குலர் ஸ்டேட்டே யொழிய (Secular state) மதத்திற்கு விரோதமாக அமைந்திருக்கக் கூடிய ஒரு அமைப்பு அல்ல என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

அப்படி இருக்கக்கூடிய ஒரு அமைப்பு இருக்கும் பொழுது தனிப்பட்ட ஒரு மதத்திற்கென்று இல்லாமல் எல்லா மதத்திலும் இருக்கும் உண்மைகளே விளக்கக் கூடிய முறையில் கல்வித் துறையில் ஏற்பாடு செய்வதன் மூலமாக அது "சேக்குலர் ஸ்டேட்க்கு" க்கு விரோதம்

(அல்லது) முரண் என்று நாம் எடுத்துக்கொள்ளமுடியாது. ஆகவே இன்றைக்குக் கல்வித்துறையிலே தனிப்பட்ட இந்து மதமோ, முஸ்லீம் மதமோ கிறிஸ்தவ மதமோ வேறு எந்த மதமோ என்று இல்லாமல், நாம் நம் பேரி யோர்கள் ஞானிகள் எல்லோரும் எல்லாமதத்திலும் அடிப் படையாக இருக்கக் கூடிய உண்மை ஒன்றுதான் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கின்ருர்கள். அவ்வடிப் படையான உண்மையை நம்முடைய இளைஞர்கள் தேரிந்துகோள்ள வாய்ப்பு ஏற்படுத்திக்கோடுப்பது மிகவும் அவசியம், அதிலே அடிப்படையாக உள்ளது நல்வாழ்க்கை. ஒழுக்கமும் கட்டுப் பாடும் அடிப்படையாக உள்ள வாழ்க்கையை வைத்துத் தான் எந்த மதமும் அமைந்திருக்கிறது. ஒழுக்கமும் கட்டுப் பாடும் நம் இளைஞர்கள் மத்தியிலே வந்து எந்த அளவிற்கு அது அமைகிறதோ அந்த அளவிற்குத்தான் மற்ற அறிவுகள் எல்லாம் பயன்படக்கூடிய முறையிலே வந்து அமையும். அவ்வாறு இல்லாவிட்டால் வேறும் அறிவு வளர்ச்சியின் காரணத்திஞலே ஒருவருக்கோருவர் இன்னும் தீவிரம் வேகம் வீரத்தோடு பகைத்துப் போரிட்டுக் கோள்வதற்கு இந்த அறிவு பயன்பட்டாலும் படலாம்.

அதன் காரணத்திஞலேதான் ஆத்மீகத் துறையில் போதுமான அளவு வளர்ச்சி அடைவதற்கு நம் இளைஞர் களுக்கு நல்ல பயிற்சியையும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கோடுப்பது நம்முடைய கடமையாக அமைந்திருக்கிறது. ஆகவே, இந்த விஞ்ஞானத்திற்கும் மேய்ஞ்ஞானத்திற்கும் ஏதோ முரண்பாடு உண்டு என்பதைத்தவிர்த்து இரண்டிற்கும் ஒரு இணைப்பை ஏற்படுத்தி அந்த இணைப்பின் மூலமாக மனித சமுதாயம் போருளாதாரத்துறையில் முன்னேற்றம் அடையவேண்டும். நல்ல மனமும் நல்ல பண்பும் நல்ல ஆத்மீகத்துறை வளர்ச்சியும் ஏற்பட வேண்டும். இந்த விஞ்ஞான வளர்ச்சி காரணமாக ஆத்மீகத்துறையில் நற் பயன்கள் மனித சமுதாயத்திற்கு ஏற்படக்கூடிய முறையில் விஞ்ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும். அதற்கு ஆத்மீகம்தான் உதவும் என்ற முறையில் இந்த இரண்

டிற்கும் ஒரு பெரும் இணைப்பை ஏற்படுத்திப் புதிய வழியைக்காட்டப் புதிய திட்டத்தை வகுக்க நாம் முன்னணி யில் வந்து நின்று செயலாற்றி வெற்றிபெற வேண்டும். இதற்கு ஆத்மீகத்துறையில் சிறப்புற்றவர்களாக விளங் குவது அவசியம்.

அப்படிச் சிறப்புற்று விளங்குவதற்கு அடிப்படையாக இருப்பது நல்வாழ்க்கை. ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடைய வாழ்க்கை. அது இல்லாவிட்டால் வேறு எந்த வழியை நாம் பின்பற்றினுல்கூட ஆத்மீகத்துறை வளர்ச்சியாக ஏற்படாது. ஆகவே, அத்தகைய வாழ்க்கையை இளைஞர்கள் எல்லோ ருக்கும் ஏற்படுத்துவதற்கு இங்குச் செய்துவரக்கூடிய முயற்சியை நான் பெரிதும் பாராட்டுகிறேன். நம் நாட்டில் இதைப்போன்ற மடாலயங்கள் பல ஏற்படுத்தி ஆத்மீக வளர்ச்சிக்காகவும் கடவுள் வழிபாட்டிற்காகவும் ஏற்பாடு செய்திருக்கிறது; ஆனுல் உண்மையான கடவுள் வழிபாடு மக்கள் வழிபாட்டின் மூலமாகத்தான் ஏற்படமுடியும் என்று நம் பெரியோர்கள் வலியுறுத்திக் கூறி இருக்கிருர்கள். ஆகவே, கடவுள் வழிபாடு என்பது நம்மை நாமே உயர்த்திக் கொள்வதற்காக நாம் செய்யக்கூடிய ஒரு முயற்சி.

இந்தக் காரணத்திஞலேதான் இந்த மடாலயத்தை அடிப் படையாகக் கொண்ட ஸ்தாபனங்கள் ஏதோ வெறும் பூஜை செய்யக்கூடிய ஆலயங்களாக மட்டும் அமைந்துவிடாமல் மக்களுக்கு உதவி செய்யக்கூடிய நிலையங்களாக விளங்கு கின்ற அளவிற்குத்தான் அவைகள் உண்மையான ஸ்தா பனங்களாக விளங்கமுடியும். அக்காரணத்திஞலேதான் மடாலயங்கள் இருக்க வேண்டுமா? அவைகள் அவசியமா? வேண்டுமா? வேண்டாமா என்கின்ற பிரச்னை எல்லாம். இந்த மடாலயங்கள் என்ன பணியைச் செய்யப்போகின்றன என்பதைப் பொறுத்துத்தான் பிற்காலத்தில் நாம் அதற்கு விடைகொடுக்க முடியும். உண்மையான தொண்டுகளைச் செய்து மக்களுடைய ஆத்மீக வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் பாடுபடக்கூடிய ஸ்தாபனங்களாக இருந்தால் யாருமே அந்த

ஸ்தாபனங்களை அழித்துவிட முடியாது. அவ்வாறு இல்லாது வேறுவழியில்சென்று மக்களுக்கு உதவாத ஸ்தாபனங்களாக இருந்தாலும் எத்தனை சட்டங்கள் போட்டாலும், எத்தனை பாதுகாப்புக்கள் கொடுத்தாலும் யாரும் காப்பாற்றவும் முடியாது. ஆகவே, இன்றைக்கு இதைப்போன்ற ஸ்தா பனங்கள் மேன்மேலும் வளர்ச்சியுற வேண்டும், நீடித்து நம்மிடையே இருக்க வேண்டும் என்று சொன்னுல் எப்பேர்ப்பட்ட பணியை இந்த ஆலயங்கள் செய்கின்றன என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறதே ஒழிய வேறு ஒன்றும் இல்லை.

இந்தத் துறையில் இதைப் போன்ற ஸ்தாபனங்கள் நடைபெற்று அதன் மூலமாக நம் மக்கள் மேன்மையுறு வதற்கு, அதிலும் முக்கியமாக நம் இளைஞர்கள் நற்பயிற்சி பெறுவதற்கு நல்வாழ்வை நடத்தக்கூடிய தகுதியைப் பெறுவதற்கு இங்கு நல்லமுயற்சிகள் செய்துவருகின் ருர்கள். அந்த முயற்சி மேலும் மேலும் வெற்றிபெற வேண்டும். இந்த முயற்சி மேலும் மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டு அந்தமுயற்சி வெற்றிபெறுவதற்காக அமைந்துள்ள இந்தக் கட்டிடத்தைத் திறந்து வைக்கக் கூடிய வாய்ப்புக்கிடைத்தது பற்றி நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்தக் கட்டிடத்திலே பயிற்சிபெறுகின்ற இளைஞர் எல்லோரும் நல்ல அறிவுபெற்றவர்களாக, நல்ல ஆத்மீக உயர்வு பெற்றவர்களாக வளரவேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டு, இந்த நற்பணியில் ஈடுபடுத்தக்கூடிய வாய்ப்பைக் கொடுத்த தற்காக, தருமபுரம் ஆதீனத்திற்கும் இங்குக்கூடி இருக்கக் கூடிய உங்கள் எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வணக்கத் துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

சென்னை, தருமபுர ஆதீன
மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின்

ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவில்
(31—12—1958-ல்)

சென்னை அரசாங்க முதலமைச்சர்

கனம். உயர்திரு. K. காமராஜர் அவர்களது

தலைமை உரை

பெரியோர்களே,

உங்களுடைய இந்தப் பிரசார நிலையத்தின் ஆண்டு விழாவில் கலந்துகொள்வது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பிரசார நிலையத்தினர் நல்ல முறையில் சமயத் தொண்டு செய்து வருகிறார்கள். குழந்தைகளுக்கெல்லாம் சமயக் கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள்; அவர்கள் மூலமாக வும் சமய உணர்ச்சியை மக்களிடையே வளர்க்கிறார்கள். இந்தச் சிறந்த தொண்டிற்காக ஆதீனத்தைப் பாராட்ட வேண்டும். சமயம் வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சனையைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. எந்த நல்ல காரியத்திற்கும் எதிர்ப்புக் காட்டுபவர்கள் இருக்கத் தான்செய்வார்கள். இதுபற்றியெல்லாம் நாம் கவலைப்படா மல் நல்ல காரியங்களைத் தொடர்ந்து செய்துவரவேண்டும். மனித உள்ளத்தில் உள்ள நல்ல உணர்ச்சிகளை வளர்ப்பதுதான் சமயத்தின் நோக்கம். இம்மாதிரியான உணர்ச்சிகளைச் சமயம் தட்டி எழுப்புகிறது. எப்படியும் சுயநலம் கொஞ்சம் இருக்கத்தான் செய்யும். அது இல்லாமல் வாழ்க்கை நடத்த முடியாது. ஆனாலும் சுயநல உணர்ச்சிகளைக் குறைத்து நல்லஉணர்ச்சிகளைத் தூண்டச்சமயம் உதவுகிறது. மக்கள் உள்ளத்தில் நல்லஉணர்ச்சிகள் உண்டாகவேண்டும். அந்த நல்ல உணர்ச்சிகளைச் சமயம் நமக்குக் கொடுக்கிறது. எந்த நல்லஉணர்ச்சிகளும் நாட்டிற்குத்தேவைதான். மக்கள் உள்ளத்தில் நல்ல உணர்ச்சிகள் உண்டாகப் பிரசாரம் தேவை. அதுபோலவே சமயப்பற்றுக்கும் பிரசாரம் தேவை. அப்பொழுதுதான் மறைந்து கிடக்கும் பல உண்மைகளை மக்கள் புரிந்துகொள்ள முடியும். நல் வழியில் வாழவும் தொடங்குவார்கள். ஆதலால் இந்தப் பிரசார நிலையத்தினர் மேன்மேலும்நல்ல தொண்டுகளை நல்ல முறையில் செய்து வருவார்களாக.

சென்னை, தருமபுர ஆதீன

மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

திருவெம்பாவை - திருப்பாவை மாநாட்டில்

1—1—59ல்

சென்னை மாநிலக் கல்வி & நிதி அமைச்சர்

கனம். திரு. சி. சுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்களது

தலைமை உரை

"மாதங்களில் மார்கழி சிறந்ததென்று பேசுவார்கள் என்றாலும் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விநாடியும் சிறந்ததுதான். சென்ற மாதங்களையும், நாட்களையும், விநாடிகளையும், நாம் மீட்டும் பெற முடியாது. ஆதலால், காலத்தை நல்வழியில் நாம் பயன்படுத்தவேண்டும். 'கனவேகமாகக் கழிந்து போகும் காலத்தை வீணாக்காமல் நம் கண் முன்னாகக் காட்சி அளிக்கும் அனைத்துக்கும் காரண வஸ்துவான கடவுளை வழிபடுவதன் மூலமாக நாம் உயர்வடைய நம் முன்னோர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடுகளில் பாவைப் பாடல்களும் ஒன்று. நம் உள்ளத்தைத் தொடக்கூடிய வகையில் அவை அமைந்துள்ளன. அவற்றைப்பாடினால் நாம் மன உயர்வு பெறலாம்; இம்மன உயர்வுமூலம் வாழ்க்கையையே உயர்த்திக்கொள்ளலாம். கடவுள் வழிபாட்டிலேயே சதாகாலமும் ஈடுபட்டிருப்பதென்பது எல்லோருக்கும் சாத்தியமானதல்ல. எனவே வாழ்க்கையை நடத்திக்கொண்டே கடவுள் வழிபாட்டிலும் ஈடுபட நமக்குப் பல்வேறு மார்க்கங்களைக் காட்டியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள். பல்வேறு பாவங்களில் கடவுளை வழிபடலாம் என்ற முறையை வகுத்திருக்கிறார்கள்.

நன்மை தீமை செய்கிற அத்தனை பேருக்கும் தாய் தந்தையாக இருப்பவர் கடவுள். அவரிடத்தில் நாம் பக்தி செலுத்துவோமானால் நலமடையலாம். கடவுளைத் தாயும்

தந்தையுமாக நம் முன்னோர்கள் வைத்துச் சித்திரித்துக்காட்டி யிருக்கிறார்கள். தொண்டனாகச் சேவகனாக நாம் இருந்து அவனை ஆண்டவனாக வழிபடலாம். தோழனாக வைத்து அன்பு செலுத்தலாம். அவனைத் தலைவனாக (காதலனாக) வைத்தும் வழிபடலாம். தோழனாகவும் நண்பனாகவும் காட்டித்தோழமை உணர்ச்சிபெருக வழி தேடியிருக்கிறார்கள். பகவானைக் காதலனாகவும் உயர்வு கொடுத்துப் பேசியிருக் கிறார்கள். சேவகனாகவும் வணங்க ஏற்பாடு செய்திருக் கிறார்கள். அன்பு உணர்ச்சியுடன் மட்டுமன்றிப் பகைமை உணர்ச்சியுடன்கூட ஆண்டவனை வழிபடலாம் என்று தேர்ந்திருக்கிறார்கள். மனத்தில் தோன்றும் உணர்ச்சிகளைச் செம்மைப்படுத்தி உயர்த்தி எல்லாம் கடவுளின் வடிவம் என்ற பாவம் ஏற்படப் பல பல சாதனங்களை உண்டுபண்ணி யிருக்கிறார்கள். உணர்ச்சிகள் எப்படிப் பட்டதாயினும் கடவுளுடன் ஒன்றும்போது அவை எரிந்து பக்தியாக, அன்பாக மாறி விடுகின்றன. நம் வாழ்க்கை நல்ல முறையிலேயே அமைய வேண்டுமென்று எண்ணி நம் ஆன்றோர்கள் நமக்கு வகுத்துக்கொடுத்தவைதான் 'பாவைப் பாடல்கள்'. இவற்றுள், மணிவாசகரும், ஆண்டாளும் ஆண்டவனைக் காதலனாக வழிபட்டுள்ளனர். அவர்கள் அருளிச்செய்த பாடல்கள் திருவெம்பாவை - திருப்பாவை.

சந்தாதாரர்கள் கவனிக்க வேண்டுவன

'ஞானசம்பந்தம்' சந்தாவிற்குப் பணம் அனுப்புபவர்கள் 'சந்தா' விற்குரிய தொகையைமட்டும் அனுப்புதல் வேண்டும். ஆதீன வெளியீடு முதலியவற்றிற்குச் சந்தாத் தொகையோடு சேர்த்து அனுப்பப்பெறும் தொகை 'ஞானசம்பந்தம்' சந்தாவிற்குரிய தொகையாகவே கருதப்பெறும்.

திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்
ஸ்ரீ சனிபகவானுக்குத் தங்கக் கவசத் திருப்பணியை
24—12—58-ல் தொடங்கி வைத்து

தருமபுர ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய

அருளுரை

அன்பர்களே! இந் நன்னாளில் ஒரு திருப்பணியில் ஈடுபட நேர்ந்தது பெரிதும் சிறந்ததாகும். அறமே உயிர்க்குத் துணை. அறம் பலவகைப்படும். அவற்றுள் கடவுளுக் குரியவாறு செய்யும் அறமே மேலானது. எமனுக்கும் சனி பகவானுக்கும் மிக அஞ்சுகின்றார்கள் மக்கள். இன்று இங்கு வந்து வழிபடும் மக்களின் தொகையே அதற்குச் சான்றாகும். எமனுக்கு அஞ்சும் இயல்பை எல்லோரும் அறிவர். திருக்கடவூர்த் திருவிழாவே அதை நன்கு காட்டும்.

இப்போது இங்குக் கூடியிருக்கும் அன்பர்கள் ஸ்ரீ சனி பகவானுக்குத் தங்கக் கவசம் செய்விக்கும் புண்ணியத்தை மேற்கொண்டிருக்கின்றார்கள். இது மிக நல்ல தொண்டு. பகவான் திருவுருவம் சிறியதே. அதனால் அதன் கவசத் திற்குப் பெருந்தொகை வேண்டா. வேண்டிய அளவு தொகை சிலநாளில் கிடைத்துவிடும். கவசத்தை விரைவில் அணிவித்துக் கண்குளிரக் காணலாம்.

செல்வம் புண்ணியத்தைச் செய்யவும் அப்புண்ணி யத்தால் விளையும் நல்ல இன்பத்தை அடையவும் கிடைத்தது. அதைப் பாவத்திற்செலவிடாமல், இத்தகைய தெய்வ கைங்கரியத்தில் பயன்படச் செய்வது சிறந்தது. 'காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடைவழிக்கே' என்றார் பட்டினத் தார். 'பற்றித்தொடரும் இருவினைப் புண்ணிய பாவமே' என்றதும் அவர் திருவாக்கே. அழியும் செல்வத்தால் அழியாத சிவபுண்ணியத்தைத் தேடிக்கொள்வதே அறி வுக்குப் பொருத்தம் ஆகும்.

ஆதலின், இப்பகவானுக்குரிய தங்கக்கவசத் திருப் பணிக்கு அன்பர்கள் மிக்க அன்போடு பொருளுதவி முதலியவை செய்து திருவருளைப் பெறுவார்கள் என்று கருதுகின்றோம். வாழ்க திருநள்ளாற்று நம்பெருமான்!

கந்தபுராணப் போற்றிக் கலிவெண்பா

கோவை. ஸ்ரீமத். சம்பந்தசரணலயத் தம்பிரான் அவர்கள்
(சிவக்கவிமணி)

காப்பு.

சீராருங் கந்த புராணச் சிறந்துவரும்
பேராருங் காதை பிறங்கிடவே — ஏராரும்
போற்றிக் கலிவெண்பாப் போற்றிசெயக் காப்பாகும்
சாற்றுங் கணபதியின் ருள்.

நூல்

பூமகனும் நல்ல புயல்வணனும் வானவரும்
தாமருவித் தக்கன் றனிவேள்வித் — தாம்வழுவிப்
போந்ததனுற் புக்க பெரும்புன்மைத் தீதறவே
சார்ந்தகோடுந் தண்ட நிகழ்ந்தும்பின் — மீந்தவினை
தன்னுற் கோடுஞ்சூராற் றண்டிக்கப் பெற்றவராய்ப்
பன்னுட் பரிபவங்கள் பட்டார்கட் — கின்னல்களைப்
போக்கிப் புகல்கோடுத்தே ஆண்டஅர சுந்தரவே
யாக்கவந்த செய்ய அருள்போற்றி — நீக்கமறும்
ஐந்து முகங்களோடும் ஆகு மதோமுகமும்
வந்து போருந்த வறுமுகங்கள் — தந்து
பரம னிருந்த பகலவற்றின் பாலின்
உருவ நுதற்கண்ணி லோவ்வோர் — போரிவரவே
தோன்றிடவே வந்த தோழில்போற்றி; யாங்கவற்ருல்
கான்றேவரும் ஆற்ருர் கலங்கவே — ஏன்றுகோண்டு
காற்றுங் கனலுங் கவின்புனலுந் தாங்ககிலார்
ஏற்றுஞ் சரவணத்தி லேற்றிடலும் — ஆற்றவே
அங்கே மதலையா யழகோ டவதரித்துச்
சிங்கார மான செயல்போற்றி — அங்கையால்
அந்தா யணைத்தேடுக்க ஆறு முகங்கோண்டு
கந்தனுய் வந்த கவின்போற்றி — வந்த
அறுமீன் முலையுண் டழுதுவிளை யாடி
யுறுபயனை யங்கவர்கட் குய்க்கும் — திறம்போற்றி;
நற்சிலம்பின் மங்கையர்பால் வந்த நவவீரர்
விற்சிலம்பு தம்பியராய் மேவியிடப் — போற்புறவே

கோண்டு மகிழ்ந்த குணம்போற்றி; அங்கவருட்
கண்டவீர வாகுக் கவின்றலைமை — கோண்ட
தகரேற்றைக் கைக்கோண்டு தானேறி யுய்த்து
மிகவுலகைக் காத்தளித்த வேற்றித் — தகைபோற்றி;
நான்முகன்ரு னற்குடிலை தன்னிற் பொருளுணரான்
மேன்மைதருஞ் சிட்டி விதிப்பதேங்ஙன் — ருனேனவே
குட்டிச் சிறையிட்ட கோலச் செயல்போற்றி;
இட்டமாய்த் தந்தைக் கிறையிறுத்தே — தோட்டசிறை
வீடுவித்து நான்முகன் மேற்கருணை செய்தருளிக்
கூடுவித்துச் செய்த குணம்போற்றி — நாடியரன்
கேட்கப் பிரணவத்தின் கேடில் பெரும்பொருளை
ஆக்கமிகச் சொன்ன அருள்போற்றி — ஊக்கமிகும்
வேற்றிவே லும்பல் விறற்படைக ளும்பெற்றுக்
கோற்றமிகு தம்பியருங் கூடவே — மற்றுமிகு
பான்மைமிகு சேனைப் பதியாகத் தேன்றிசைபோங்
தாண்மைமிகு சூரை யறுத்திட்டு — வானவர்கோன்
முன்னிழந்த வானரசை முற்றுங் கோடுத்தளிக்க
அன்னவற்காய் வந்த அளிபோற்றி — முன்னேதிர்ந்த
தாரகனும் வஞ்சத் தடங்கிரியு மாய்ந்தோழிய
வீரமாய் விட்டதனி வேல்போற்றி — வாரமுடன்
தில்லை முதலான சீர்ப்பதிகள் கண்டுதோழு
தேல்லை கடந்த வியல்போற்றி — நல்லதிரு
மண்ணி நதிக்கரையில் மன்ன நகர்அமைத்தங்
க்ண்ணலைப்பூ சித்த அறம்போற்றி — வண்ணமிகு
சேந்திற் பதிசேர்ந்து சேம்மை நகர்சேய்து
வந்தமர்ந்து நின்ற வளம்போற்றி — நைந்து
புகலடைந்த இந்திரற்கப் போதப யந்தந்
தகமகிழச் செய்த அருளின் — வகைபோற்றி
சூரன் திறமதனைச் சோதிக்கத் தூதாக
வீரன் றனையேவி விட்டதனுல் — ஏர்கோள்
அறநேறியைக் காத்த வருள்போற்றி; யிங்கே
திறமா ரசுரகுரு செப்பச் — சிறவார்
அசுரர்வர லாற்றை யறியான்போற் கேட்ட
இசையாஞ் செயல்போற்றி; யீண்ட — மிசையமரர்
வன்சிறையை நீக்க மறுத்த கோடுஞ்சூர்மேற்
றன்செயலாற் போர்க்கேழுந்த தாள்போற்றி – முன்னசுரர்க்
காய்வந்த சேனைக் கடலையடர்த் தேற்பகையைச்
சேய்கோண்டு வீட்டும் செயல்போற்றி — காய்ந்துவந்த

சிங்க முகனைத் திறலார் குலிசத்தால்
மங்க வதைத்த வகைபோற்றி — துங்கமுறும்
வெஞ்சூரன் மண்டு விறற்போரின் மாவாகி
நஞ்சமென நின்று நகழ்ந்திடலு — மிஞ்சுபெரு
வீரவே லாற்கூறிட் டாங்கவன்பின் மேவுநிலை
ஓர்சேவ லோர்மயிலா யோய்யெனவே — ஆர்த்துவர
ஆங்கவற்றின் மேலருட்கண் ஆரச்செய் தோர்கொடியும்
ஓங்கிவரு மூர்த்தியு மாக்கொண்டு — பூங்கழற்கீழ்
வைத்த கருணை வளம்போற்றி ; தேவர்தமை
யுய்த்தசிறை மீட்கும் உரைபோற்றி — மெய்த்துவளர்
செந்தினகர் சேர்ந்து சிவபூசை செய்துலகோர்
சிந்திக்கச் செய்த செயல்போற்றி — யந்தநாள்
வானவர்கள் பூசை மகிழ்ந்தருளி யாங்கவர்கள்
மேன்மைபெறக் கொண்ட விதம்போற்றி — பான்மைபெறும்
சீரார் பரங்குன்றிற் தெய்வதமால் யானைதனை
ஏரார் மணஞ்செய் யிதம்போற்றி — போரார்ந்த
வள்ளி மலையிற் குறவர் மனமகிழ
ஒள்ளிய மான்மகளா யுற்றசீர் — வள்ளிதனை
வேட்டு மணஞ்செய் விதம்போற்றி ; நற்றணிகைக்
கோட்டு மகிழ்ந்த குணம்போற்றி — மீட்டும்பர்
கோனுக் கரசு கொடுத்த குணம்போற்றி ;
மேன்மைப் பதிவணங்கு மெய்யடியார்க் — கான
வரங்களெலாம் தந்தவரை வாழவைக்குஞ் செய்ய
திரங்கொள் பெருங்கருணைச் சீரின் — உரம்போற்றி ;
இம்மையிலு மம்மையிலு மின்பந் தரவந்து
செம்மை யருளளிக்கும் சீர்போற்றி — எம்மை
இடுக்கண் களையகற்றி யெவ்விடத்துந் தீமை
தடுக்கும் பெரியதயை போற்றி — எடுக்கும்
பிறவிகளிற் ருளேன்று மெவ்விடத்தும் பேணல்
மறவா வரமருளும் வண்மைத் — திறம்போற்றி ;
கோடி யிரவிகள்போற் றேரிளமை கூர்அழகிற்
றேடிவருந் தெய்வ நலம்போற்றி — நாடுகின்ற
தெய்வதமால் யானை திருவடிகள் போற்றி ; வள்ளி
எய்தவரும் பாத விணைபோற்றி — யுய்யவருள்
சேவலு நல்ல மயிலுந் திருவேலும்
காவல்கொண்ட தெய்வக் கவின்போற்றி — ஏவல்செயும்
மெய்யடியார் தாள்போற்றி ; மேன்மைதரு செந்தினகர்
வையமுய்ய வைத்த வழிபோற்றி — ஒய்யெனவே

நற்போதிய மாமுனிக்கு நல்ல தமிழ்ப்போத
முற்பகலி லூட்டு முறைபோற்றி — அற்புமிகும்
கீரனை யாண்டுகொண்டு கேதமிலா மற்காத்துத்
தேரும்வகை மீட்ட திறல்போற்றி — வீரமிகுத்
தந்த வருணகிரி யையனையாட் கொண்டுதமிழ்
தந்த கருணைத் தரம்போற்றி — முந்துதமிழ்க்
கச்சியப்ப ஞற்கந்தக் காதைதனைச் சொல்வித்தே
இச்சகத்தார்க் கீந்த இயல்போற்றி — மெச்சிடவே
கொண்டு குமர குருபரர்க்குத் தந்தவருள்
மிண்டுந் தமிழின் வளம்போற்றி — மண்டுபுகழ்ச் 55
சீர்ப்பரங் குன்றின்மேற் றெய்வ மணக்கோலம
ஏற்றருளிச் செய்த இசைபோற்றி — நாற்கடல்சூழ்
சீரலைவாய்த் தங்கிச் சிவபூசை செய்துபுவி
யாரவைத்த நல்ல வருள்போற்றி — ஏர்கொண்ட
ஆவிநன் மாக்குடியி லார விருந்தருளி
மேவுங் கருணை விதம்போற்றி — காவல்பெற
ஏரகத்தே நின்றங் கியற்குருவாய்க் கோள்கோலம்
பாரகத்தே வைத்த பதம்போற்றி — ஊருலவு
குன்றுகள்தோ றும்சென்று கூர்ந்து விளையாடும்
மன்றுகந்த செய்ய வளம்போற்றி — நன்று 60
பழமுதிரும் சோலைதனிற் பார்புகழ வெய்தும்
கிழமைச்சீர்க் கேளிர் கிளைக்கும் — தழைபோற்றி
சீரடியார் மெய்ப்பணிகள் செய்ய வருட்கைதந்து
நேர்மைபெற என்று நிகழ்வித்தே — யார்வமுற
ஆண்டருள வேங்கு மெளிதா மருள்போற்றி
காண்டகுசீர்க் கந்தன் கழல். 63

வாழ்த்து

சேந்தி னகர்வாழி ; செம்மைதரு வேல்வாழி
கந்தப் பெருமான் கதைவாழி ; — வந்திடுசீர்
நல்லடியார் வாழி ; நலந்தருமிப் போற்றிசைப்பார்
எல்லவரும் வாழி யினிது.

கந்தபுராணப் போற்றிக் கலிவெண்பா முற்றிற்று.

முப்பொருள் விளக்கம்

தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர், சித்தாந்தக் கலைமணி,
வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 18, இதழ் 1, பக்கம் 20 இன் தொடர்ச்சி)

மாணுக்கன் :

அற்றேல், அம்முயற்சி யறிவு, கருவியறிவும், உயிரறிவும் அன்றென்பதற்குச் சான்றியாது? கருவிகளின் நீங்கியவழி உயிர் ஒன்றனை அறிதலும் செய்தலும் கூடாவன்றோ?

ஆசிரியர் :

"கருவியறிவும் உயிரறிவும் சுட்டறிவாம்" என்பதனையும் "இறை சுட்டறிவான் அறியப்படுவது அன்று" என்பதனையும் முன்னர்ப் பலவாற்றாலும் உணர்த்திப்போந்தா மன்றோ? அதனான் இறையை அறியும் அறிவாகிய அது சுட்டறிவாகிய கருவியறிவும் உயிரறிவும் அன்றாம்.

இனி உலகப்பொருள்களை அறிய முயலும் முயற்சியோடு, இறையை அறிய முயலும் முயற்சியிடை வேற்றுமை பெரிதாகலின், அவ்வேற்றுமை யுணரவல்லார்க்கு இறையை அறியும் அறிவு, ஏனை உலகப்பொருள்களை யறியும் அறிவன்று, அதனின் வேறாம் என்பது இனிது விளங்கும் என்க.

"பிரகாசத்திநுக்கும் பிரகாசிக்க வேண்டுவதின்மையானும், அப்பிரகாசத்திநுக்குப் பிரகாசம் இன்மையானும்" என்பது சிவஞானபோதம் (சூத்திரம் ௬. அதிகரணம் - ௨.

"அறிபொரு ளசித்தாய் வேறாம் அறிவுருப் பொருள்சத் தென்னின்
அறிபவ னறியா னாகில் அதுவின்று; பயனு மில்லை;
அறிபவ னருளினாலே அநந்திய மாகக் காண்பன்;
அறிபொருள் அறிவாய் வேறாய் அறிவரு ளுருவாய் நிற்கும்"

என்பது சிவஞான சித்தி.

"உயிர் கருவிகளின் நீங்கியவழி அதற்கு அறிவும் செயலும் நிகழா" என்பது சுட்டி யறியப்படும் பொருளிடத்தே யன்றி, இறையிடத்தன்று; அதனான், உயிர் சுட்டி யறியப்படும் பொருள்களை அப்பெற்றியவாய கருவிகளைப்பற்றி நின்றறிந்து

அநுபவித்தல் போலச், சுட்டிறந்தறிவதாகிய இறையை அப்பேற்றறித்தாய அதனருளைப் பற்றிநின்றறிந் தநுபவிக்குமாக லாற், கருவிகளின் நீங்கினமையால் உயிர் இறையை அறிதற்கிழுக்கின் றேன்க. இங்ஙனம் பல்லாற்ருனும் பரந்து பட்டுக் கூறியவாற்ருன்,

"மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னின் அல்லான்;
ஒப்புடைய னல்லன்; ஒருவ னல்லன்;
ஓரூர னல்லன்; ஓர் உவம னில்லி;
அப்படியும், அந்நிறமும், அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன், இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்.
இவன்இறைவன், என்று எழுதிக் காட்டொணாதே."

(தனித் திருத்தாண்டகம்) என்றருளிச் செய்தவாறு, "இறை அருளறிவில்லார்க்கு ஏனை நூலறிவானும் உலக அறிவானும் இன்னதேன உணரப்படாது" என்பதும் "அருளறிவுடையார்க்கு இன்னதேன இனிதுணரப்படும்" என்பதும் தேற்றேன உணர்ந்து கோள்க.

"காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய்"

(திருத்தாண்டகம் - திருமறைக்காடு. க.)

"சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பக்தி வலையிற் படுவோன் காண்க"

(திருவாசகம் திருவண்டப்பகுதி)

என்றற் ருெடக்கத்தனவாக இறையை அரிதேனவும், எளியதேனவும் இருவகைத்தாகவும் அருளிச்செய்த திருமோழிகட்கேல்லாம் இதுவே கருத்தேன வுணர்க.

இன்னும். திருவண்டப் பகுதியுள், "மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கும் - மின்னொளி கோண்ட போன்னொளி திகழத்- திசைமுகன் சேன்று தேடினர்க் கோளித்தும்" என்றேடுத்துக் கோண்டு இறை பல்லாற்ருலும் உணரப்படாது ஒளித்துநின்றமையைப் பலபட விரித்துக்கூறி அஃது அருளாளர்க்கு வேளிநின்றமையை உணர்த்தியவாறுங் காண்க.

இத்துணையும் இறையது 'சோருபலக்கணம்' எனப்படும். தன்னியல்பு உணர்த்தினர்; இனித் 'தடத்தலக்கணம்' எனப் போதுவியல்பு உணர்த்துவாம். (தோடரும்)

சிவாகமம்
[கிரியா ஸாரம்]

ஆகம வித்துவான்,
திரு. S. சுவாமிநாத சிவாசாரியர்,
தலைமை ஆசிரியர்,
வேதசிவாகம பாடசாலை, தருமபுரம்.

हालास्येशं प्रणम्यादौ मीनाक्षीसहितं प्रभुम् ।
श्रीमद्धर्मपुराधीनमठालयविराजताम् ॥
शैवपीठाधिरूढानां भास्वतामिव भास्वताम् ।
श्रीलश्री ज्ञानसम्बन्धपरमाचार्ययोगिनाम् ॥
सुब्रह्मण्याभिधानानामाज्ञया क्रियतेऽधुना ।
स्वामिनाथशिवाचार्यवर्येणागमसूरिणा ॥
आगमाब्धेः क्रियासारः सागरादमृतं यथा ।
गुणं गृह्णन्तु विबुधाः क्षीरं हंसो यथांम्भसः ॥

ஹாலாஸ்யேசம் ப்ரணம்யாதெள மீனுக்ஷீ ஸஹிதம்ப்ரபும் |
ஸ்ரீமத்தர்மபுராதீன மடாலய விராஜதாம் ||
சைவ பீடாதிருடானும் பாஸ்வதாமிவ பாஸ்வதாம் |
ஸ்ரீலஸ்ரீ ஞானஸம்பந்த பரமாசார்ய யோகினும் ||
சுப்ரமண்யா பிதாநாநாமாக்ஞயா க்ரியதே(அ)துநா |
ஸ்வாமிநாத சிவாசார்ய வர்யேணுகம ஸூரிணு ||
ஆகமாப்த்தே: கிரியாஸார: ஸாகராதமிருதம் யதா |
குணம் க்ருண்ஹந்து விபுதா: க்ஷீரம் ஹம்ஸோ யதாம்பஸ: ||

முதற்கண் ஸ்ரீ மீனுக்ஷி தேவியுடன் கூடிய ஆலவாய்ச் சோக்கேசனை வணங்கி, லக்ஷிமீ விலாசம் பொருந்திய தருமபுர மடாலயத்தில் விளங்குகிறவர்களாயும், சைவ பீடத்தில் ஆட்சி புரிகிறவர்களாயும் தினகரன்போன்று பிரகாசிக்கின்றவர்களாயும் சுப்பிரமண்ய என்ற பதத்தைப் பெயராக வுடையவர்களாயும் இருக்கிற ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசார்ய வர்யயோகீந்திரர் அவர்களுடைய உத்தரவினுல் சிவாகம வித்வானுன சுவாமிநாத சிவாசாரியராலே ஆகமமாகிற ஆழியின் நின்றும் ஸாகரத்தினின் றும் எடுக்கப்பட்ட அமிருதம்போல (எடுத்து) கிரியைகளின் சாரமானது செய்யப்படுகின்றது. வித்வான்கள் ஹம்ஸமானது ஜலத்தை நீக்கிப் பாலை கிரஹிப்பதுபோல் குணத்தைக் கோள்ளட்டும்.

भवसंचितपापौघविध्वंसनविचक्षणम् ।
विघ्नांधकारभास्वन्तं विघ्नराजमहं भजे ॥ (रौरवागमम्)

பவ ஸஞ்சித பாபௌக வித்வம்ஸன விசக்ஷணம் |
விக்னாந்தகார பாஸ்வந்தம் விக்னராஜ மஹம்பஜே ||
(ரௌரவாகமம்)

பவ - ஸம்ஸார வாழ்க்கையால், ஸஞ்சித - சேர்க்கப்பட்ட, பாபௌக - பாப ஸமுகங்களை, வித்வம்ஸன - நாசம் செய்வதில், விசக்ஷணம் - ஸாமர்த்தியமுள்ளவராயும், விக்ன - தடைகளாகிற, அந்தகார - இருளுக்கு, பாஸ்வந்தம் - சூரியனாயும் இருக்கிற, விக்னராஜம்-விநாயகனை, அஹம் - நான், பஜே - சேவிக்கிறேன்.

எந்தக் கிரியையின் ஆரம்பத்திலும் விக்ன ராஜனை வணங்க வேண்டும். விநாயகரை வணங்கித் தொடங்கிய கிரியை விக்னமின்றி நிறைவேறும். அதுகாரணம்பற்றியே ஒவ்வொரு காரியத்தின் ஆரம்பத்திலும் விநாயகரைச் சந்தோஷிக்கச் செய்து தடைநீக்கம் செய்து கொள்ளவே "சுக்லாம் பரதரம்" என்று வினாயகப் பிரார்த்தனை ரூபமான சுலோகத்தைச் சொல்லித் தலையில் குட்டிக் கொள்ளுகிறோம்.

शुक्लांबरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் |
பிரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வவிக்னோப சாந்தயே ||

சுக்ல - வெண்மையான, அம்பர - வஸ்திரத்தை, தரம் - உடுத்திக்கொண்டிருப்பவராயும், விஷ்ணும் - வியாபகராயும், சசிவர்ணம் - சந்திரனைப் போன்ற நிறமுடையவராயும் சதுர் ஜம் - நான்கு கைகளுடையவராயும் இருக்கிற, ப்ரஸன்ன வதனம் - யானைமுகத்தோனை, ஸர்வ விக்னோபசாந்தயே - எல்லா இடையூறுகளும் சாந்தியடைவதின் பொருட்டு, தியாயேத் - தியானம் செய்ய வேண்டும்.

விஷ்ணும் என்ற பதத்திற்கு "விஷுல் வியாப்த்தௌ" என்ற தாதுவினால் வியாபகர் என்று பொருள், "ப்ரஸன்ன:,

கரிகுஞ்சர:'' ப்ரஸன்ன என்ற பதத்திற்கு யானை என்று பொருள் என்று விச்வ நிகண்டு கூறுகிறது.

यत्र यत्र क्रियारंभो मुष्टिभ्यां मूर्ध्नि देशिकः ।
विनायकं नमस्कृत्य कुट्टनं पञ्चवारकम् ॥
अमृतं यत्सुषुम्नायाः सरिदम्भिव सागरम् ।
मूलाधारस्थविघ्नेशं प्राप्य कर्म शुभावहम् ॥
(सकलागमसारम्)

யத்ர யத்ர க்ரியாரம்போ முஷ்டிப்யாம் மூர்த்னி தேசிக: |
விநாயகம் நமஸ்கிருத்ய குட்டனம் பஞ்ச வாரகம் ||
அமிருதம் யத்சுழும்ஞயா; ஸரிதம்ப்விவ ஸாகரம் |
மூலாதாரஸ்த விக்னேசம் ப்ராப்ய கர்ம சுபாவஹம் ||
(ஸகலாகமஸாரம்)

யத்ரயத்ர - எங்தெங்த விடத்தில், கிரியாரம்ப: - கிரியையின் ஆரம்பமானது செய்யப்படுகிறதோ, அந்த அந்த விடத்தில் தேசிக: - ஆசாரியனானவன், விநாயகம் - விநாயகரை, நமஸ்க்ருத்ய - வணங்கி, முஷ்டிப்யாம் - கைகளின் முஷ்டிகளால், மூர்த்னி - தலையில், பஞ்சவாரகம் - ஐந்து தடவை, குட்டனம் - குட்டிக்கொள்ளுதலைச் செய்ய வேண்டும், அப்பொழுது, அமிருதம் - மஸ்தகத்திலிருக்கும் அமிருதமானது' சுழும்ஞயாம் - சுழும்ஞ நாடியின் வழியாக, ஸரிதம்பு - நதியின் ஜலமானது, ஸாகரமிவ - சமுத்திரத்தை அடைவதுபோல, மூலாதாரஸ்தவிக்னேசம் - மூலாதார ஸ்தானத்திலிருக்கும் கணபதியை, ப்ராப்ய - அடைந்து, கர்ம - நாம் செய்யும் கர்மாவை, சுபாவஹம் - சுபமுள்ளதாகச் செய்கிறது.

மூலாதாரஸ்தானமானது நமது சரீரத்தில் முக்கிய நாடியான வீணா தண்டத்தின் அடிப்பாகத்தில் விளங்கும் இடம்.

व श ष स दळयुक्ते सौम्यमाधारपद्मे
तरुणमरुणगात्रं वारणास्यं गणेशम् ।
अभय वरद हस्तं चारुपाशाङ्कशोद्यत्
करयुगळमनन्यं चिन्तयेद्विघ्नराजम् ॥
(शिवागमपद्धति)

வ ச ஷ ஸ தளயுக்தே ஸௌம்ய மாதாரபத்மே
தருணமருண காத்ரம் வாரணாஸ்யம் கணேசம் |
அபய வரத ஹஸ்தம் சாருபாசாங்கு சோத்யத்
கரயுகள மனன்யம் சிந்தயேத் விக்னராஜம் ||
(சிவாகம பத்ததி)

வசஷஸ தளயுக்தே - வ. ச. ஷ. ஸ. என்ற நான்கு எழுத்துள்ள இதழுடன் கூடிய ஆதார பத்மே மூலாதார ஸ்தானத்திலிருக்கும் தாமரைப்பூவில், ஸௌம்யம் - ப்ரஸன்னமுள்ளவராயும், தருணம் - யௌவனப் பருவமுடையவராயும், அருண காத்ரம் - சிவந்த திருமேனியுடையவராயும், வாரணாஸ்யம் - யானை முகமுடையவராயும், அபயவரத ஹஸ்தம் - அபயமளிப்பதாயும் வரமளிப்பதாயும் விளங்கும் இரண்டு கைகளையுடையவராயும், சாருபாசாங்குசோத்யத்கரயுகளம் - சாரு - அழகிய, பாச - பாசம் என்ற ஆயுதமென்ன, அங்குசம் - கண்டரக் கோடாலி என்ன இந்த இரண்டு ஆயுதங்களால், உத்யத் - விளங்குகிற, கரயுகளம் - இரண்டு கைகளுடன் கூடியவராயும், விக்னராஜம் - தடைகள் என்ற கணங்களுக்கு எஜமானராயும் இருக்கிற கணேசம் விநாயகரை. அனன்யம் வேருக இல்லாதவனாய் சிந்தயேத் நினைக்க வேண்டும்.

இவ்வாறு மூலாதாரத்திலிருக்கும் மகாகணபதியை நினைத்து. தியானம் செய்து மஸ்தகத்திலிருக்கும் அமிருதத்தினால் அபிஷேகம் செய்து திருப்தி செய்விக்கப்பட்ட கணேசன் மூலமாகக் கிரியையின் தடை நீக்கத்தைப்பெற வேண்டும்.

(தொடரும்)

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர். திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

குட்டுப் படுவர் குருவின்கை மாணவர் கொற்றவரார்
கட்டுப் படுவர் களவாடுந் தீயவர் கத்தியினால்,
வெட்டுப் படுவர் விபசாரப் பாதகர் மேதினியில்
முட்டுப் படுவர் முயற்சியில் லாதவர் முற்றினுமே. 44

விருந்து யாப்பு :

அன்பின் வெற்றி

செஞ்சொற்கொண்டல் - வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனர்,
தமிழாசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்

(மலர் 18, இதழ் 1, பக்கம் 33 இன் தொடர்ச்சி)

மூன்ரும் படலம்

சூழ்ச்சி

" ஆண்டிற் சிறியவராலே — இன்று
ஆணவக் காரிக ளாலே
தூண்டும் பழிகள் சுமந்தேன் — எள்ளித்
தூதூ எனுமுறை கொண்டேன் !
வேண்டும் கனிமொழி யாளோ — இன்று
வீணிற் துரத்தியும் விட்டாள் !
யாண்டும்எவ் வண்ணமு மேனும் — கேடு
ஆக்கிட நான்முந்த வேணும் " 21

என்று பலப்பல கூறி — வீட்டில்
எங்கும் சுழன்றங்குச் சீறி
நின்றனன் தீயகு ணத்தான் — நரை
நீண்ட கொலைவல்ல எத்தன் !
தென்றல் புகுந்ததைத் தேரான் — குளிர்
தெண்ணில வந்ததுந் தேரான் !
நன்றி மறந்திடுந் தீயன் — கோடு
நஞ்செனும் நெஞ்சினன் பேயன் ! 22

தங்கைக் குரியதாம் வீட்டை — இங்குத்
தக்கபோய்ச் சீட்டினைக் காட்டித்
தன்கைக் கொணர்ந்திடல் வேண்டும் — மகள்
சால்பு நிறைந்திடும் பள்ளிப்
பங்கு துறந்திடல் வேண்டும் — அதைப்
பார்த்து மகிழ்தலும் வேண்டும் !
சிங்கத்தின் முன் விளையாட்டா ? — என்று
சிந்தித்துச் சிந்தித்து நின்ருன் ! 23

மாமனிருந்திடும் வேளை அங்கு
மாணிக்கமும் வந்து சேர்ந்தான் !
'சேமமா, என்னப்பா சேதி ?' — என்று
செப்பிஉட் கார்ந்தனன் மோதி ;
'சேமத்துக் கென்னப்பா மோசம் — என்
சீர்மைக்கு வந்ததே நாசம் !
ஊமைச் செவிடனைப் போலே — கேட்டு
ஓடிவரல் இங்கு ஆச்சு ' 24

என்று மொழிந்தனன் மாமன் ; — 'அட !
என்ன உனக்கென்ன பித்தா ?
தென்றல் போலே யவள் நின்றாள் — உன்
தேமதுர மொழி ஒன்றால்
மன்றல் முடிந்திடு முன்னே — நீயும்
மாழ்கிட லோமனம் இன்னே !
வென்றிஉனக் கெனச் சொன்னான் ; — அங்கு
வீட்டில் நிகழ்ந்ததை அன்னான் 25

சொல்லத் தயங்கின னேனும் — உடன்
சொல்லி முடித்தனன் மாமன் :
'வெல்ல மொழியவள் காதல் — வலை
வீசிக் கிடப்பதைக் காதில்
நல்லவர் நாலுபேர் சொல்லக் — கேட்டு
நைந்தனன் ' என்றவன் சொல்ல,
'எல்லவரும் என்ன சொல்வார் ?' — என்று
ஏக்கத்துடன் மாமன் கேட்டான் ! 26

'பான்மொழி ஓரிளங்காளை — அவன்
பாலன் மகன்தமிழ்ச் செல்வன்
மென்மனங் கொண்டுள்ள தாக — ஊரில்
மேவிடும் வார்த்தை'யென் றோதி
'நான் வரு கின்றேன்பின் ' என்று — அவன்
நல்லவகையில் நகர்ந்தான் !
மீனொன்று துள்ளிட நீரில் — அலை
மேவுதல்போல் மனம் கொண்டான் ! 27

'என்ன குலத்தில் பிறந்தாள் ? — இவள்
எங்கோ பிறந்தவன் மேலே
எண்ணமும் வைத்தன ளாமே — இதை
ஏற்று மறந்திட லாமோ ?

அன்னவன் ஆசி முடித்து — அவள்
அன்பினை முற்றும் ஒடித்து
மன்னவன் நானு மணப்பேன் — என்று
மன்னி நினைத்தனன் போய்யோன் ! 28

காதல் புனைந்தன ளாமே ! — குலக்
கட்டுப் பாடற்றவ ளாகி !
காதல் புனைந்தன ளாகின் — குலக்
கண்ணிய மென்னவிங் காகும் ?
தீதறு நற்குடி வந்தோள் — ஒரு
தீண்டத் தகாதவன் தன்னை
மூதறிஞர் இசை வின்றி — மணம்
மூளத் துணிந்தது நன்றோ ? 29

நானென்ன வீண்மோழி யானோ ? — என்னை
நாலுபேர் மேச்சிடல் வீணோ ?
வானென்ன செல்வம் படைத்தேன் — போருள்
வாரிக் குவித்திங் கடைத்தேன் !
தேனென்ன பாலென்ன தேவைப் — போருள்
தேடிப் பேருஞ் செல்வ னுவேன் ?
தானென்ன கண்டு விட்டாளோ ? — என்னைத்
தட்டி மோழிந்தனள் நாவால் ! 30

எண்ண அலையில் மிதந்தே — மாமன்
ஏற்கும் வழியோன்று தேடிக்
கண்ணைச் சுழற்றியவ் வீட்டில் — பல
காரண காரியம் நாடி
திண்ணை முதல்வரை ஓடி — சூழ்ச்சி
தேடினனே பல கோடி !
விண்ணைத் தழுவிய திங்கள் — தன்னை
வேட்டிப் பிரித்திடல் விந்தை ! 31

நல்லிசை கூட்டிடும் வீணை — தரும்
நாதத்தை ஆங்கதன் வேருய்
வல்லவிதம் பிரிப் பாரோ ? — அது
வையத்திற் கூடுவ தாமோ ?
நல்லோளி காட்டிச் சிரிக்கும் — எழில்
நன்மலர்த் தாமரை தன்னிற்
புல்லிய நன்மணந் தன்னை — இங்கு
புல்லியரும் பிரிப் பாரோ ? 32

ஒட்டுமிரண்டுளந் தம்மை — ஒரு
ஓநாய் பிரித்திட வெண்ணி
வெட்டித் தொலைத்திட லாமோ ? — அது
விந்தைக் குரியது மன்றோ ?
எட்டுத் திசையிலும் ஓங்கி — நிற்கும்
இன்னருள் வெள்ளத் தினாலே
கட்டிப் பிணைந்தன நெஞ்சம் — அவை
காவியம் ஓவியம் தீட்டும் ! 33

உள்ளம் பலப்பல உண்டு — அவை
ஒன்றுதல் தானெங்கே உண்டு ?
வள்ளல் இயற்கையின் வண்ணம் — அது
வையத்திலே ஒளி பண்ணும் !
அள்ள நினைத்தன னேனும் — நில
வள்ளிக் குவித்தலு மாமோ ?
உள்ளக் கோதித்திடு மன்றோ ? — இரண்
டுள்ளத்தை யீங்கு துணித்தல் ? 34

தன்னை யிகழ்ந்தத னாலே — இவன்
தாவிய சூழ்ச்சிகள் பின்னி
மின்னை நிகர்த்தவள் தன்னை — உயிர்
மேவிய அன்புநேர் அன்னை
அன்னவ ளோடுந் தொலைக்கத் — திட்டம்
ஆற்றிநின் றானெனின் அந்தோ
நன்மையிங் கேப்படி வாழும் ? — என்று
நைந்திடும் நம்முடை நெஞ்சும் ! 35

Dharmapura Adhinam

Velur Sri Vaithianathaswami Devasthanam,

Vaithiswarankoil.

கோயில் நன்றாகப் பாதுகாக்கப்படுகிறது. மிகவும் திருப்தியாக இருக்கிறது.

திருநள்ளாறு தேர்ப்பாரண்யேஸ்வரசுவாமி
தேவஸ்தானபரிபாலன்சபை,
(Sd.) வை. பழநி,
3—12—58.
(Sd.) S. Muthu Ramalingam.

கம்பன் கண்ட கன்னித் தமிழ்நாடு

திரு. மது. ச. விமலானந்தம், எம். ஏ ,
தமிழ்த்துறை, சரபோசி கல்லூரி, தஞ்சாவூர்.

இருபெரும்புலவர் : சோழப்பேரரசு மேன்மையுற்று உச்ச நிலை எய்திய காலம் 12ம் நூற்றுண்டு. அன்றைய தமிழ்ப்பெரும் புலவர்களிலே சிறந்து விளங்கியோர் இருவர். ஒருவர் சேக்கிழார். மற்றொருவர் கம்பர். இவர்களிலே ஒருவர் சைவர், இன்னொருவர் வைணவர்; சோழ மன்னனின் அமைச்சர் ஒருவர், அவைக்களப் புலவர் ஒருவர். இருவரும் இரு பெருநூலைத் தமிழுலகிற்குத் தந்து சிறந்தனர். அவைதாம் சைவப்பெருங் காப்பியமாகிய 'பெரிய புராணமும்', வைணவப் பெருநூலாகிய 'கம்பராமாயணமு'மாகும். இருவரும் சோழ மன்னரால் ஆதரிக்கப்பட்டோர். எனவே சோழப்பேரரசின் மீதும் சோணாட்டின் மீதும் இருவருக்கும் சொல்லொணாத பேரன்பும் பெருமதிப்பும் உண்டு. இதனை அவரவர்களின் நூல்களே நூவலுவதைக் காணலாம். இருவரும் குறையில்லா நிறையுடை நாட்டைப் பற்றிப் பேசுகின்றனர். சேக்கிழாரும் கம்பரும் கனவுலகிலே கவலையெல்லாம் மறந்து கன்னித் தமிழ்நாட்டைக் கண்டு களித்தனரேனினும், தம்மையும்மீறி சோணாட்டைச் சிறப்பிப்பது கண்கூடு. சேக்கிழார் எடுத்த எடுப்பிலேயே;

'பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுட்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன்'
(திருநாட்டுச்சிறப்பு-1)

என்று கூறுகின்றார் எனின் அவர்களின் நாட்டுப்பற்றும் செஞ்சோற்றுக் கடனையும் என்னேனென்பது. முன்னர் சேக்கிழார் கண்ட செந்தமிழ் நாட்டைக் கண்டோம். இப்போது கம்பன் கண்ட கன்னித் தமிழ்நாட்டைக் கண்டு களிப்போமாக.

கம்பன் காலநிலை : கம்பன் கனவு நாட்டைக் காணுமுன்னர்' அவன் காலத்துத் தமிழக நிலையை அறிதல் வேண்டும். தமிழகம், பல்லவர் - களப்பிரர் - பாண்டியர்களின் ஆட்சிக்குட்பட்டு அரசியல் போராட்டத்தாலும் பூசலாலும் தடுமாறி, சமண பௌத்த, சைவ வைணவச் சமயப் போராட்டங்களால் தாழ்ந்தும்

தளர்ந்துமிருந்தது. இந்த நிலை ஒருவாறு மாறி மறைந்து மறுமலர்ச்சி யடைந்த காலம் சோழப் பேரரசு தலையெடுத்த காலம் - கி. பி. 10ம் நூற்றுண்டு என்க. சமயப் பூசல்கள் ஒருவாறு, அடங்கி சைவமும் வைணவமும் தனிச்சிறப்புற்றன. ஆலயங்கள்தோறும் ஆழ்வார், நாயன்மார்களின் திருவிழா கொண்டாடப்பட்டன. சமயக் குரவர், நாயன்மார், ஆழ்வாராதி களின் அருந்தமிழ்ப் பாடல்கள் ஆலயங்களிலே ஓதப்பெற்ற காலமும் இதுவே. ஆய்ந்து ஓய்ந்திருந்த தமிழகத்தில் சமய, தமிழ் நூல்களும் தழைக்கலாயின. இத்தகைய புத்துயிரும் புதுவாழ்வும் அதுபோதும் அடுத்தும் தோன்றிய இலக்கியங் களிலே இடம்பெறுமன்றே? அம்முறையிலேதான் கம்பன் காவியம் - அவன்கண்ட கன்னித் தமிழ்நாடு அவனது காலநிலை காட்டும் கண்ணுடியெனத் திகழ்கின்றது எனலாம்.

கம்பன் கண்ட கனு! தாழ்ந்து தளர்ந்த தமிழகத்தின் குறையனைத்துமில்லா நிறையுடைய நாட்டை எண்ணிப் பார்க் கின்ருன கம்பன். எண்ணத்தின் எதிரொலியாகக் கனவு நாடு காட்சியளிக்கின்றது. அக்காட்சியே கம்பரது கவியமுதத்திலும் காட்சி தருகின்றது. சேக்கிழாரும் கம்பரும் ஒரே நூற்ருண்டை யோராயினும் இருவர் கண்ட நாட்டிலும் சிற்சில வேறுபாடும் மாறுபாடும் உண்டு, சேக்கிழார் மலைக்குச் சிறப்புத்தந்து 'திருமலைச் சிறப்பு, திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு' என்று அமைக்கின்ருர். ஆனல் கம்பரோ ஆற்றின் அவசிய முணர்ந்து 'ஆற்றுப் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம்' என அமைக்கின்ருர். கம்பன் கண்ட நாடு என்றதும் நம் மனத்தில் 'வண்மையில்லை ஓர் வறுமையின்மையால்' என்ற அடியே எதிர்த்தோன்றுகின்றது. எங்கும் நீர்வளமும் நில வளமும் சிறக்க, அதனுல் நீர்மையும் நேர்மையும் தழைக்க, அமைதி தவழ வேண்டுமென்பது கம்பன் கருத்து. கனவு - எல்லாம் இற்றைநாளில் உருசியா, அமெரிக்கா போன்ற இடங் களில் பொருள்வளம் கொழிப்பது பற்றியும், ஆளின்றியே விற்பனை முதலியன நடப்பது பற்றியும் இனிக்க இனிக்கப் பேசுகின்ளுேம். இதுபோன்றே இந்தியாவிலும் இருக்கவேண்டு மென எண்ணுகின்ருேம்; ஏங்குகின்ருேம். இவைபோன்ற கருத் தெல்லாம் கம்பனது நாட்டில் காட்சியளிப்பதைக் காணும்போது எவருள்ளந்தான் மாட்சிமையடையாது? மகிழாது? என்னே கம்பன் கண்ட நாடும் நகரும்!

மேகமும் மலையும்: நாடு நல்லதோரு நாடாகின் எல்லா வளமும் இருக்கவேண்டும். வாழ்வின் முதற்படியான உணவு பற்றிய கவலையே காட்சியளிக்கக் கூடாதன்றோ? உணவு முட்டின்றி கிடைக்க, தட்டின்றிப் பெருக நிலவளம் நிறைந்திருத்தல் வேண்டும். நீரின்றி நிலவளம் அமையாது. நாட்டுவளமும் காட்டு வளமும் நிறைய நாட்டின் மூலை முடுக்கெல்லாம் நல்ல நதிகள் பாய்ந்து பரவவேண்டும். நிதி தருநதியிலே நீர்நிறைய நன்மலையும் காடும் நிறைந்தோளிர்தல் வேண்டும். அப்போது தானே நீர்முகந்து வரும் மேகமனைத்தும் மலை மீதே பொழிய மழைநீர், ஆருய்ப் பெருக இயலும் என்பதையெல்லாம் எண்ணினுர் போலும் கம்பர்! எனவேதான் மலையின் நிலையும், மேகத்தின் வேகமுமுணர்ந்து முதற்கண் மேகத்தை,

‘நீறு அணிந்த கடவுள் நிறத்தவான்
ஆறு அணிந்துசென்று ஆர்கலி மேய்ந்தகிற்
சேறு அணிந்த முலைத்திரு மங்கைதன்
வீறு அணிந்தவன் மேனியின் மீண்டதே’ (ஆற்று - 2)

என்கிருர். கடலை நோக்கிச் சென்ற வெண்மேகம், கருமேகமாய் மீண்ட கதையை; அழித்தற் கடவுளாம் சிவனைப்போன்று சென்றமேகம் காத்தற்கடவுளான திருமாலைப்போன்று திரும்பிய தாம். என்னே கம்பன் கடவுட்சிந்தையும் செயலும்! இயல்பாலும் நிறத்தாலும் எண்ண எண்ண இனிக்கின்றதே இவ்வுவமை.

நீர்வளமும் நிலவளமும்: இங்ஙனம் எழுந்து பரந்து ‘உள்ளி உள்ளி எல்லாம் உவந்தீயும் அவ்வள்ளியோர் போல’ வழங்கினவாம் மேகமனைத்தும். மேகம் மலையிலே பொழிய, நீரனைத்தும் நதிவழியே நானிலத்தும் பரந்து நல்வளம்தந்து நின்றதாம். மழையனைத்தும் தாய்முலையன்ன தழைத்துத் தரணியைச் செழிக்கச் செய்ததாம்.

‘தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தோறும் வயல்கள் தோறும்
ஓதிய வுடம்பு தோறும் உயிரேன வுலாய தன்றே’ (ஆற்று - 20)

நீர்வளம் நிறையவே நிலவளம் பற்றிப் பேசவும் வேண்டுமோ? எடுத்த எடுப்பிலேயே நீர்தந்த நிறைவளத்தை-மருத வளத்தை மாண்புற விளக்குகின்ருர் மற்றுமோரு கவியால்.

மருத மாண்பு: மேகமும் வண்டுகளும் பண்ணிசைபாட, தாமரை மலர்கள் ஒளிதந்து நிற்க, குவளை மலர்கள் நாட்டியத்தை வைத்தகண் வாங்காமல் பார்க்க, ஆடு மயிலாட, அத்தாணி மண்டபத்தே அரசு வீற்றிருக்கின்றானும் மருதநில மன்னன். என்னே கம்பன் கற்பனையும் கனிமொழியும்! அத்தகைய மாண்புபெற்றுளதாம் மருதம்.

‘ தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்துநோக்கத்
தெண்திரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ!’
(நாட்டு - 4)

நாகரீகத்தின் உறைவிடம் மருதம். மருத நிலமே இத்தகைய தெனின் மற்ற நிலத்தைப்பற்றி நினைக்கவும் வேண்டுமோ ?

வயலும் வளமும்: இங்ஙனம் மருதம் மாண்புற - வயல் வளம் கொழிக்க, வகையாது ? இக்கேள்வியுணர்ந்தே கம்பனும்,

‘ ஈர நீர்படிந்து இந்நிலத் தேசில
கார்கள் என்ன வருங்கரு மேதிகள்
ஊரில் நின்றகன்று உள்ளிட உண்முலைத்
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே’ (நாட்டு - 25)

நீரால்மட்டும் நலம்பெறவில்லை நிலம். பால் வளத்தால் பயிர்கள் வளர்ந்ததெனின் பயிர்களின் நிலையினைப்பேசவுங் கூடுமோ ? நிலஞ்சுரக்கும் நிறைவளத்தையும், நன்மணிப் பிலஞ்சுரக்கும் பெறுதற்கரியவற்றையும், நதிதரு நிதியையும் தாமேயுண்டு தனிநலம் பேணுபவரல்லர் கம்பனது கன்னித்தமிழ் நாட்டினர். வறியவர்க்கு உதவி, மிக்க விருந்துண்ண மனையில் கொண்டு சேர்ப்பராம். தம்தம் இல்லின்கண் இனிதிருந்து விருந்தோடும் தமரினோடும் தாமுமிருந்து அந்தரமுதருந்துவார்களாம். எள்ளும் கொள்ளும் ஏனலும், சாமையும் நெறிகள் புதையப் பண்டி நிறைத்து மண்நெளிய ஊர்வார்களாம். என்னே நாட்டின் வளமும் வளமையும்! இதுவன்றி,

‘ நீரிடை உறங்கும் சங்கம், நிலத்திடை உறங்கும் மேதி,
தாரிடை உறங்கும் வண்டு, தாமரை உறங்கும் செய்யாள்,
தூரிடை உறங்கும் ஆமை, துறையிடை உறங்கும் இப்பி,
போரிடை உறங்கும் அன்னம், பொழிலிடை உறங்கும் தோகை’
(நாட்டு - 6)

என்று நயம்படவும் சிறப்பிக்கின்றார் தான் கண்ட நாட்டை.

மெய்ப்பொருள்

வித்துவான், திரு. மு. த. வேலாயுதனார் அவர்கள்

மனிதனின் தலையாய கடன் யாதெனப் பார்ப்புழி மெய்ப் பொருள் காண்டலேயாம். அதுவே அவன்றன் குறிக்கோளு மென்க. மெய்ப்பொருளென்பதியாது? இப் பிறப்பின்கண் மீண்டும் வாராத நெறியை யுணருந்தன்மையாம். அங்ஙனம் உணர்தற்கு அனுபவமிக்க தேசிகர் தம் திருவருள் வாய்க்கப் பெறுதல் வேண்டும். அவர் தம் பேரறிவுரையான் மெய்ப் பொருள் காணவியலும்.

மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்திற்குப் பொருள் காணவந்த பரிமேலழகியார் 'பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத வையங்களானன்றி உண்மையான் உணர்தல் என்றார். பற்றற்றான் பற்றினைப் பற்றுதற்கு மெய் யுணர்தல் அடிப்படையாய தென்பதை மறத்தலாகாது. மெய்ம் மையை மெய்யெனக் கருதலே இவ்வுலகில் காணப்படும் காட்சியாகும். மெய்ப்பொருள் யாது? பொய்ப்பொருள் யாது? என்பதைக் கல்வியறிவானுய்ந்து அநுபவத்தான் நன்குணர்தல் வேண்டும். மெய்ப்பொருள் இதுதானென வுணர்வோமாயின், பிறப்பொழிக்கும் வகையைத் தெரிந்தவராவோம். பொருளல்ல வற்றைப் பொருளென்றுணர்வதால் நேர்வது பிறப்புத்தொடரே.

" பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு "

என்ற குறட்பாவே மாண்புறும் சான்றும். எனவே, மெய்ப் பொருள் காண்டல் இறைவன்றனருளால் எய்துவதொன்றும்.

அங்ஙனம், மெய்ப்பொருளுணர்ந்தோர் மெய்ஞ்ஞானம் பெறுபவராவர். அம் மெய்ஞ்ஞானத்தான் மாறிலாத ஆநந்த மடைவர். கடவுளை மெய்ஞ்ஞான உருவாகக் காணும்பெற்றியைச்

" சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே "

என்ற ஔவையார் அருளிச் செயலால் ஆய்ந்தறிக.

இன்னும்,

"மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கு நல்லறிவே"

என்ற மாணிக்கவாசகர் வாக்காலும் நன்குணரலாம்.

எனவே, மெய்ஞ்ஞானத்திற்குக் காரணமாய மெய்ப்பொருள் ஆண்டவனருள் வெள்ளத்திற் ருேய்தற்கு உறுகருவியா யமைந் துளது. 'வைதாரையும் இங்கு வாழவைப்போன்' எனக் கூறிய அருணகிரிநாதர், தாம் பெற்ற அநுபவப்பொருளை யெடுத்துக் காட்டு முகத்தான்

"கூகாவென வென்கிளை கூடியழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல! வேலவ! நாலுகவி
த்யாகா! சுரலோக சிகாமணியே!"

எனக் குறிப்பிட்டுள்ளார். ஆண்டவன் உண்மை ஞானத்தை உபதேசித்த கருணையை என்னென்றுரைத்தலியலும் எனக் கூறி யுள்ளார் பிறிதோரிடத்தில். அக்கருத்தைப்

"பிமரங்கெட மெய்ப்பொருள் பேசியவா"

என்ற அடியால் உணரலாம். பிறழ உணரும் உணர்ச்சிகெட எனக்கு மெய்ப்பொருளைத் திருமுருகன் உபதேசித்தவாறென்னே! என அதிசயிக்கின்ருர். பரம்பொருள் செய்பொருளுணர்வித்து மரணமிலாப் பெருவாழ்வளித்த செய்தியைக் கண்டு கண்டு உளம் பூரிக்கின்ருர்.

மற்றுமோரிடத்தில், உண்மைப்பொருளை அறியாது நாட் களை அவலமாகக் கழித்ததை நினைத்து நினைத்து நெஞ்சங் கரைகின்ருர். அங்ஙனம் அறியாது காலங்கடந்ததை எண்ணி வருந்துகின்ருர்.

"செம்மான்மக ளைத்திரு டும்திருடன்
பெம்மான்முரு கன்பிற வானிறவான்
சும்மாவிரு சொல்லற வென்றலுமே
அம்மா!பொரு ளொன்றும் அறிந்திலனே"

என்ற செய்யுளை நோக்குக.

இன்னும்,

" கரவாகிய கல்வியுளார் கடைசென்று
இரவாவகை மெய்ப்பொரு ளீகுவையோ "

எனக் குறித்துள்ளார். இலக்கணங்கற்ற கல்வியாளர்களுட் சிலர், தாங்கள் ஏதோ மற்றவர்களைக்காட்டினும் கற்றுவிட்ட தாகச் செருக்கடைதலுண்டு. அச்செருக்கானே பிறர்க்குத் தாங்கற்ற கல்வியைத் தெளிவுறுத்தின் தம் மதிப்புக்குறையும் எனத் தம்மை மிகைபட மதித்துக்கொண்டு தரவுடையராய் வாழ்தலுண்டு. அத்தகையோரிடஞ்சென்று இரவாவகையில், உண்மைப்பொருளை ஈயமாட்டாயோ என வேண்டுகின்றார் அருணகிரிநாதர். உண்மைப்பொருளைக் காண்பவர்களுக்கு இவ்வுலகில் வேறென்ன பொருள் வேண்டும்? அப்பொருளே மிகச் சிறப்புடைத்தாமென்க.

" வேதமும் வேதத்தினந்தமும் அந்தத்தின் மெய்ப்பொருளாம்
பேதமும் பேதத்தின் மார்க்கமும் மார்க்கப் பிணக்கறுக்கும்
போதமும் போதவுருவாகி யெங்கும் போதிந்துவிந்து
நாதமும் நாதவண்டார்க்கும் வெண்டாமரை நாயகியே "

எனக் கம்பர், கலைமகளைத் துதிக்கும் பதத்தையும் உணர்தல் வேண்டும். நாமகள் வேத முடிவிலும், அம்முடிவின் மெய்ப் பொருளாகவும் காணப்படும் நிலையை விளக்குகின்றார். எந்தப் பொருள் ஆதியுமந்தமுமற்று என்றுமுளதாய்க் காணப்படு கின்றதோ அதுவே மெய்ப்பொருளாமென்க. ஞானமற்றவர்க்குப் பொய்ப்பொருள்போல் தோன்றுவதும் அம்மெய்ப்பொருளே. அருளுடையவர்க்கு அம்பிகை காட்சிக்குரியவளாகவும், பேரொளி யுடையவளாகவும், மெய்ப்பொருளாகவும் தோன்றுவள்; அறியா தவர்க்கு இருளாய் விளங்குவள். இக்கருத்தை

" அருளாய் விளங்குபவர்க் கொளியாய் அறியாதவருக்கு
இருளாய் விளங்கு நலங்கிளர்மேனி யிலங்கிழையே "

என்ற அடிகளான் உணரலாம்.

இன்னும், தொண்டரடிப்பொடியாழ்வார்.

" மெய்யர்க்கே மெய்யனாகும்
விதியிலா என்னைப்போலப்
பொய்யர்க்கே பொய்யனாகும் "

எனக் கூறிய கருத்தையும் நோக்குக.

" ஐயனை யத்தனை யாளுடையாமாத்தூ ரண்ணலே
மெய்யனை மெய்யர்க்கு மெய்ப்பொருளான விமலனை "

என்றிசைக்கின்றார் அருந்தமிழ்க்கடல் ஆரூரர்.

எனவே, மெய்ப்பொருளா யிருப்பவனும் மெய்ஞ்ஞான வடிவா யிருப்பவனும் ஆண்டவனொருவனேயென்பதை 'மெய்ஞ் ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே' என வரூஉம் மருவ நெறியளிக்கும் வாதவூரர் வாக்கால் உணரலாம். இன்னும் ஆண்டவன் சிவபோக விளைவாகவுங் காணப்படுகின்றான் என்ற கருத்து 'மெய்யான தெய்வமே மெய்யான சிவபோக விளைவே' என்றதனாற் பெறப்படும்.

ஆதலான், ஆண்டவன் மெய்ப்பொருளானவன், மெய்ஞ் ஞானச் சுடராயிருப்பவன் என்ற கருத்து விளங்குகின்ற தன்றோ? அவன்றரும் பொருளே மெய்ப்பொருளாம். அப் பொருள் அறியாமையை நீக்கிப் பிறவித்துன்பத்தை யொழிக்க வல்லது. வீட்டினைத் தரவல்லது.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Sri Amirthakateswaraswami Devasthanam
Tirucadaiyur. (Mayuram Tk.)

திருநள்ளாறு சனி பெயர்ச்சி மகோற்சவத்திற்காகப் போகும் வழியில் மீண்டும் ஸ்ரீ காலசம்ஹார மூர்த்தியையும் ஸ்ரீ அமிர்த கடேஸ்வரரையும் ஸ்ரீ அபிராமித் தாயாரையும் தரிசிக்கும்பேறு வாய்த்தது. மார்கழிமாதமாகையால் காலையில் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை பாடி ஒலிபரப்பினார்கள். நம்மை வாழவைக்கப் பிறந்த நம்முன்னோர்களின் எண்ண அலைகள் அழகான சொல் வடிவத்தில் வைகறைப்போதில் காற்றிலே மிதந்துவந்து உயிருக் கும் உணர்வுக்கும் குளிர்ச்சிதந்தது. இந்த தேவஸ்தானத்தைச் சிறப்பான முறையில் நிருவகித்துவரும் தருமை ஆதீனத்தின் சைவத்தொண்டு வளர்வதாக. திருக்கடவூருறை கூத்தன் திரு வடிகள் வாழ்க.

(Sd.) ஒ. வி. அளகேசன்,
24—12—58.

(True Copy)

சில திருத்தங்கள்

பன்மொழிப் புலவர்
திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்
(ஓய்வுபெற்ற ஆராய்ச்சிப்புலவர், சென்னைப் பல்கலைக் கழகம்)

கார்த்திகைத் திங்கள் இதழில் வந்துள்ள 'சில திருத்தங்கள்' என்னுங் கட்டுரை பலயாண்டுகட்கு முன் - திரு. பொன்னையா அவர்களின் வெளியீடு வந்த யாண்டில் - எழுதியது. அதனை அன்பர், திரு. முத்து. சு. மாணிக்கவாசகரவர்கள் (தருமபுரத் தமிழ்க்கல்லூரித்தலைவர்) இப்பொழுது வெளியிட்டிருக்கின்றார்கள்.

சொற்களைப் பிரித்துப் பதிப்பித்ததனால் தொல். எழுத்ததிகார நச்சினார்க்கினியருரையில் நேர்ந்த சில பிழைகளையும் அவற்றின் திருத்தங்களையும் மேற்குறித்த கட்டுரையில் தெரிவித்திருந்தேன். சைவசித்தாந்த மகாசமாஜம் வெளியிட்டுள்ள சீவக சிந்தாமணியில் அவ்வாறு நேர்ந்துள்ள சில பிழைகளை இங்குக் குறிக்கின்றேன். குணமாலையாரிலம்பகத்தில் 300 ஆஞ் செய்யுள்

ஆரமின் னும்பணை வெம்முலை ஆடமைத் தோளினாள்
வீரனுற் றதுயர் மின்னெனெ நீக்கிய மெல்லவே
நேரமன் னும்வரு கென்றுநின் தாள்நினைந் தாளரோ
பாருண்மன் னும்பழி பண்பனுக் கின்று விளைந்ததே'

என்று பதிப்பிக்கப்பட்டுளது. இதில் 'நின் தாள்' என்று பிரித்திருப்பது தவறு. அது 'நின்றாள்' என்றிருத்தற்பாலது; ஐயரவர்கள் பதிப்பில் இவ்வாறே இருக்கின்றது.

'தன் கணவனுக்குற்ற துயரை மின்போற் கடிது மறையும்படி நீக்குதற்கு இவ்வாயிலிலே மிகவும் அணுக வருவார்களாக என்று 'நின்றவள்' பண்பனுக்கு இன்று விளைந்ததொரு பாரிலே மன்னுகின்ற பழியை மெல்லவே நினைந்தாள்' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். இனி, 'நின்தாள்' என்பதற்குப் பொருள் அமைதலில்லை. செய்யுளின் பொருளை நோக்காமலே சொல்லைப் பிரித்துப் பதிப்பித்திருக்கின்றனர்! இனி, கனகமாலையாரிலம்பகத்தில், 186 ஆஞ் செய்யுள்,

'பாட்டினைக் கேட்ட லோடும் பழம்பகை நட்புமாமே !
ஓட்டியுங் கோறும் அன்றே நம்பிதா னுண்மை பெற்றான்
நாட்டிடம் பரந்து போகி நாடுதும் நாங்கள் என்று
ஈட்டமும் வேறுமாகி இலைப்புரை கிளைத்திட்டேமே'

என்று பதிப்பிக்கப்பட்டுளது. இதில், 'பெற்றான்' என்று முற்று வினையாகப் பிரித்துப் பதிப்பித்திருப்பது தவறு.

'பாட்டினைக் கேட்ட அளவிலே அதன் பொருளைக் கருதிச் சீவகன் 'பிழைத்தபடியை யறிந்தால்' பின்பு சில நாள் கழித்தும் அவனைக் கோல்வேமன்றோ ?'

என்னும் உரையை நோக்கின், 'நம்பிதான் உண்மை பெற்றால்' என்று பிரித்தல் வேண்டும் என்பது புலனாகும். 'நம்பிதா னுண்மை பெற்றா னாட்டிடம் பரந்துபோகி' என்பதன் பொருளை நோக்கின், 'பெற்றால் நாட்டிடம்' என்று பிரித்துப் பதிப்பித்திருப்பர். இனி, முத்தியிலம்பகம் 1¹ ஆஞ் செய்யுள்,

'கொற்றவி மகனை நோக்கிக் கூறினள் என்ப நுங்கோக்
குற்றது பிறர்கள் கூற உணர்ந்தனை · ஆயின் நானும்'
இற்றென உரைப்பக் கேண்மோ........ என்றாள்'

என்று பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. இப்பகுதிக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர்

'நுந் தந்தைக்குற்ற தீங்கைப் பிறர்கூற அறிந்தாய் என்று சொல்லுவார்கள். ஆயினும், யான் இத்தன்மைத்து என்று கூறக்கேட்பாயாக என்று கூறினாள்'

என்று பொருள் எழுதி, 'உணர்ந்தனை என்ப என மாறுக' என்றும், 'ஆயினானும்' என்புழி 'ஆன் சாரியை' என்றும் குறித்திருக்கின்றார். இவ் வுரையை நோக்கியிருப்பாராயின், 'ஆயின் நானும்' என்று பிரித்திருக்கமாட்டார்கள். இங்கு, ஆயினும் என்பதே மிக்க அமைவுடையதாதல் அறியத்தகும்.

சொற்களைப் பிரித்ததில் நேர்ந்த பிழைகள் மட்டும் ஈண்டுக் குறிக்கப்பட்டன ; பிறவாறான பிழைகள் சில உள. அவற்றை வேறு கட்டுரையில் தெரிவிப்பேன்.

சொற்களைப் பிரித்துப் பதிப்பித்தலால் இவ்வாறு (பொருளைக் கெடுக்கும்) பிழைகள் நேர்தலை நோக்கும்போது சொற்களைப் பிரிக்காமல் பதிப்பித்தல் நன்று என்று தோன்றுகின்றது.

அண்மையில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள 'நற்றிணை'ப் புத்தகத்தில் பலப்பல இடங்களில் சொற்கள் தவருகப் பிரிக்கப்பட்டுள்ளன என்று பேரறிஞர் ஒருவர் தெரிவித்தார். அவ்வாறிருப்பவற்றிற்குத் திருத்தங் கொடுப்பது இன்றியமையாததாகும். இதனை அப் பதிப்பாளர் மேற்கொள்வாராக.

ஒரு திருத்தம்

தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் முதற் சூத்திரத்திற்கு இளம்பூரணர் எழுதியிருக்கும் உரையில்,

'நயனுடை மரபி னிதன்பய மியாதெனிற்
சேர்த்தி யோர்க்குஞ் சார்ந்துபடு வோர்க்கு
மொப்ப நிற்கு நிலையிற் றென்ப'

என்றொரு சூத்திரங் காணப்படுகின்றது. இது நடுவு நிலைச் சுவையின் பயனைக் கூறுவது. இதில்,

'சேர்த்தி யோர்க்குஞ் சார்ந்துபடு வோர்க்கும்' என்பது பொருள் அமைவுடையதாகத் தோன்றவில்லை. இவ்வடி,

'செத்தி யோர்க்கும் சாந்துபடுப் போர்க்கும்' என்றிருத்தற் பாலதாகும். அவ்வாறாயின்,

'நடுவுநிலைச் சுவையின் பயன் யாதெனின், செத்தியோர்க்கும் சாந்துபடுப்போர்க்கும் ஒப்ப நிற்கும் நிலையிற்று' என்று பொருள் அமைவுறும். இனி,

'வாய்ச்சிவா யுறுத்தி மாந்தர் மயிர்தோறுஞ் செத்தினுலும்
† பூச்சுறு சாந்த மேந்திப் புகழ்ந்தடி பணிந்த போதும்

---

† 'பூச்சிறுசாந்தம்' என்று சமாஜப் பதிப்பில் இருப்பது அச்சுப் பிழைபோலும்.

தூக்கியிவ் விரண்டு நோக்கித் தோல்வினை என்று தேறி
நாச்சேறு பராவு கோள்ளார் நமர் பிறர் என்றும் உள்ளார்'
(சீவக. முத்தி. 227)

என்னுஞ்செய்யுளால், 'சேத்தியோர்க்கும் சாந்துபடுப்போர்க்கும்' என்பதுவே தக்க பாடம் என்பது நன்கு விளங்கும்.

ஓர் ஐயம்

தோல்காப்பியம் மேய்ப்பாட்டியல் 2 ஆஞ் சூத்திரத்தின் இளம்பூரணருரையில்,

"சத்துவம் என்பது சாற்றுங் காலை
மேய்ம்மயிர் குளிர்த்தல் கண்ணீர் வார்தல்
நடுக்கங் கடுத்தல் வியர்த்த றேற்றம்
கோடுங்குரற் சிதைவோடு நிரல்பட வந்த
† பத்தேன மோழிப சத்துவந் தானே"

என்றொரு சூத்திரம் காட்டப்பட்டுளது. இதில், சத்துவம் பத்து என்று கூறப்பட்டுளது. ஆயின், ‡ மேய்ம்மயிர் குளிர்த்தல், கண்ணீர் வார்தல், நடுக்கம், கடுத்தல், வியர்த்தல், தேற்றம், குரற் சிதைவு என ஏழே கூறப்பட்டிருக்கின்றன.

வடமோழியில் சத்துவம் எட்டு என்று கூறப்படுகின்றன. அவையாவன :

1.	स्तम्भ	ஸ்தம்பம்	— அசைவின்மை
2.	प्रलय	ப்ரளயம்	— மூர்ச்சை
3.	रोमाञ्च	ரோமாஞ்சம்	— மயிர்ப்போடித்தல்

---

† ஸ்ரீ கணேசையர் பதிப்பில் (மேய்ப்பாட்டியற் சுருக்கம். பக்கம். 3. மேய்ப்பாட்டியல். 2.) 'மேய்ம்மயிர் சிலிர்த்தல்' முதலாகப் பத்துள. அதில் தேற்றத்தின் பின் களித்தல், வீழித்தல், வேதும்பல், சாக்காடு என்பவை உள. அவை வடமோழியில் உள்ளவற்றிற்கு முரணும். சாக்காடு சத்துவம் ஆகாது.

‡ மேய்ம்மயிர் 'குளிர்த்தல்' என்பது சரியான சோல்லாகத் தோன்றவில்லை.

4. स्वेदः ஸ்வேதம் — வியர்வை

5. कम्पम् கம்பம் — நடுக்கம்

6. वैवर्ण्यम् விவர்ணத(வைவர்ண்யம்) — நிறவேறுபாடு(பசலை)

7. अश्रु அச்ரு — கண்ணீர்

8. वैस्वर्यम् ஸ்வரபேதம் — குரல் வேறுபாடு

என்பன. இவ்வெட்டனுள் 3, 4, 5, 7, 8 தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. கடுத்தல், தேற்றம் இவை மேல் எட்டனுள் எவற்றைக் குறிப்பன என்று தெளிவாதல் இல்லை.

மேற் சூத்திரத்தில் 'பத்து' என்று தொகை காண்பது தவருக நேர்ந்ததாகும். இனி, எட்டாமது கூறப்படவில்லை. ஆகலின், ஓர் அடி விடுபட்டிருத்தல் வேண்டும். தமிழ்க் கல்லூரிப்பேராசிரியர்கள் இதனைப்பற்றி ஆராய்ந்துதெரிவிக்கின், கற்போர் பலருக்கும் பயனுகும்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Sri Amirthakateswaraswamy Devasthanam
Tirucadaiyur (Mayuram Tk)

கருணை வடிவான கடவூர் கடவுளைக் காணும்பேறு பெற்றேன். ஆண்டவனை அவ்வப்போது உலக வாழ்க்கையில் உழன்றுவரும் மக்களுக்கு நினைவூட்டும் சின்னமாகிய திருக்கோயில் மெருகேற்றி வரும் திருப்பணிக்குத் தலை வணங்கக் கடமைப்பட்டுள்ளோம். பணியாளர்களின் பரிவும் பணிவும் பக்தர்களுக்குப் புத்துணர்ச்சியையூட்டுகிறது. சீரிய முறையில் இக்கோயில் மேற்பார்வையிடும் தருமை யாதீனம் இன்னும் பல கோயில்களுக்கும் தன் அருட் பார்வையைச் செலுத்த ஆண்டவன் அருள்புரிவாராக,

(Sd.) த. ந. அனந்தநாயகி, M. L. A
4—6—58.

விரதம்

சிரோமணி.
பிர்மஸ்ரீ K. இராஜகோபால சாஸ்திரியார்
தருமபுரம்.

மனிதராய்ப் பிறந்தவர் அறிந்தோ அறியாமலோ பாபம் செய்கின்றனர். அத்தகைய பாபங்களை நீக்கவும், அவற்றால் உண்டாகும் தீய பயன்கள் துன்புறுத்தாமலிருக்கவும் பற்பல பிராயச்சித்தங்கள் தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. பாபம் செய்யக் காரணம் காமம், கோபம் லோபம் முதலியனவே. காரணமான இவைகளை நீக்கினால் பாபம் செய்யாமல இருக்கமுடியும். மனிதனுடைய ஆகாரத்திற் கேற்பவே காமம் முதலியன உண்டாகின்றன. ஆகாரத்தை நியமத்துடன் சில ஒழுங்கு செய்துகொண்டால் காமம் முதலியனவும் நீங்கிப் பாபங்களும் உண்டாக வழியின்றிப் போகும். ஆகையினால்தான் நம் முன்னோர்கள் பாபங்களுக்குப் பிராயச் சித்தமாகச் சாந்திராயணம் முதலிய விரதங்களைக் கூறினர். சந்திரன் பௌர்ணமி அன்று பதினைந்து கலைகளுடன் இருந்து முறையே ஒவ்வொரு கலை வீதம் குறைந்து அமாவாசை யன்று கலையின்றி மறைந்திருந்து மீளவும் நாடோறும் ஒவ்வொரு கலையாக வளர்ந்து பௌர்ணமியில் பூர்ணமாகிறான். அதுபோல பௌர்ணமியில் பதினைந்து கவளம் அன்னம் உண்டு மறு தினம் முதல் தினம் ஒரு கவளம் வீதம் குறைத்துக்கொண்டே வரவேண்டும். அமாவாசை யன்று ஆகாரமின்றி இருந்து மறுநாள் பிரதமை அன்று ஒரு கவளம், துதீயையில் இரண்டு கவளம் இவ்விதமாகப் பௌர்ணமி வரையில் தினம் ஒரு கவளம் அதிகமாகச் சேர்த்து உண்டு பௌர்ணமியில் பதினைந்து கவளம் உண்டு விரதம் பூர்த்திசெய்தல். இந்த விரதம், சந்திரனுடைய வளர்ச்சியையும், தேய்வையும் ஒத்து அன்ன கவளம் உண்ணப் படுகிறபடியால் சாந்திராயணம் எனப்படும். சிலர் அமாவாசையில் ஆகாரமின்றித் தொடங்கி மறு அமாவாசையில் முடிப்பதும் உண்டு. எறும்பு இரு ஓரங்களிலும் பருத்து இடையில் சிறுத்து இருப்பது போல பௌர்ணமியில் தொடங்கும் சாந்திராயண விரதம் இருப்பதால் பிபீலிகா சாந்திராயணம் எனப்படும் (பிபீலிகா - எறும்பு). கோதுமை போன்ற யவை என்ற தான்யம் இடைபருத்தும் இருமருங்கும் முறையே சிறுத்தும் இருப்பதால், அதுபோன்ற அமாவாசையில்

தொடங்கும் சாந்திராயண விரதம் யவமத்ய சாந்திராயணம் எனப்படும். தினம் எட்டு கவளம் வீதம் முப்பது தினங்கள் உண்டு விரதமிருப்பது சிசுசாந்திராயணம் எனப்படும். இன்னும் பல வகையான சாந்திராயண விரதங்கள் உள்ளன. பாபம் நீங்கப் பல விரதங்கள் இருப்பன போலவே புண்ணியப் பேற்றிற்கும் பல விரதங்கள் உள்ளன. பாப நீக்கத்திற்காகச் செய்யப்படுவன சாந்திகம் எனவும் புண்ணியப்பேற்றிற்காகச் செய்யப்படுவன பௌஷ்டிகம் எனவும் சொல்லப்படும்.

தான் செய்யவேண்டியதைக் குறித்து நியதமான சங்கல்பம் செய்துகொண்டு அவ்விதம் செய்து வருதல் விரதம் என்று விரத சூடாமணி சொல்லுகிறது. இவ்விதம் செய்யப்படும் விரதங்களுள் சிலதிதியையும், (விநாயக சதுர்த்தி, ரிஷி பஞ்சமி, கந்த சஷ்டி போல்வன, சில நக்ஷத்திரத்தையும், (கார்த்திகை விரதம் போல்வன) சில வாரத்தையும் (பானுவார விரதம் சோமவார விரதம் போல்வன) முக்கியமாகக் கொண்டன. சில மாதத்தையும், சில யோகத்தையும் கூடப் பிரதானமாகக் கொண்டு செய்யப்படுகின்றன. திதி, வார, நக்ஷத்திரங்களின் சேர்க்கையை முக்கியமாகக் கொண்டனவாகவும் (அமாசோம வார விரதம் போல்வன) சில உள்ளன. சில ஸ்திரீகள் மட்டும் செய்யக்கூடியன. சில புருஷர்கள் மட்டும் செய்யக் கூடியன. இம்மாதிரியான அநேக விரதங்கள் புராணங்களிலும் இதிகாசங்களிலும் உள்ளன. விரதங்கள் யாவும் சாந்திரமானத்தால் மாதங்களைக் கணக்கிட்டுச் செய்யப்படும். சில சௌர மானத்தாலும் செய்யப்படுகின்றன. குறிப்பிட்டுச் சொல்லப் படாதவரையில் சாந்திரமானமே கொள்ளத் தக்கது. இவ்வித விரதங்களைச் சொல்லப்பட்டிருக்குமிடம், செய்வதனுல் உண் டாகும் பயன், செய்ய வேண்டிய காலம், சிறப்பாகச் செய்ய வேண்டிய பூஜை முதலியவற்றை எழுதுவதே இக்கட்டுரையின் நோக்கம்

விரத தர்மங்கள் :

விரதம் செய்பவர் தன்னுடைய நித்திய கர்மானுஷ்டானங் களைச் செய்த பிறகே விரதத்தில் ஈடுபடல்வேண்டும். விரத தினத்தில் குச்சியினுல் பல் துலக்கல் கூடாது. மாவிலை முதலிய வற்ருல் வாயைச் சுத்தம் செய்துகொள்ளவேண்டும். மருந்தாக

உண்பதாக இருப்பினும் மாம்சம் கூடாது. (சக்தியற்றவர்கள் தண்ணீர், பால், பழம், மருந்து, ஹவிஸ் மூலம் (வேர்) இவைகளைச் சேர்த்துக்கொள்வது விரத பங்கத்திற்குக் காரண மாகாது) அடிக்கடி ஜல பானம் கூடாது. தாம்பூலம், உடலிலோ தலையிலோ எண்ணெ தடவுதல், சந்தனம் முதலிய பூச்சுக்கள் ஸ்திரீகளின் சேர்க்கை, காம உணர்ச்சியை உண்டு பண்ணக்கூடிய மற்ற பொருள்கள் இவைகளையும் விலக்கல் வேண்டும். விரத மத்தியில் வீட்டு விலக்கான ஸ்திரீ, நாய், சண்டாளன், பாபி முதலியவர்களைக் காணலாகாது. காம, குரோத. லோபங்களால் விரதத்திற்குப் பங்கமேற்படின் மூன்று நாள் உபவாசம் இருந்து மறுபடி விரதத்தைச் செய்யவேண்டும். விரத தினத்திற்கு முதல் நாளே ஒரு வேளை உணவு கொள்ள வேண்டும் என்பர் சிலர். விரத தினத்தில் காலையில் உண்ண லாகாது. விரதம் என்றால் ஆகாரமின்றி இருப்பதே. உபவாச தினத்தின் முடிவில் சாப்பிடுதல் பாரணை எனப்படும். பாரணை யுடன்தான் விரதம் முடிவடைகிறது. எடுத்த காரியம் இடை யூறின்றி இனிது முடிய விநாயகருடைய விரதங்களையே முதலில் தொடங்குவோம்.

சித்திவிநாயக விரதம் :

புரட்டாசி மாதம், சுக்லபக்ஷ சதுர்த்தியில் பகலில் செய்ய வேண்டிய விரதம். ஆண் பெண் இருபாலாருமே செய்யலாம். எடுத்த காரியம் இடையூறின்றி சித்திபெறுதல் முக்கியமான பயன். மற்றும் பல பயன்களும் உள்ளன. இது ஸ்கந்த புராணத்தில் சொல்லப்பட்டது. இவ்விரதம்தான் இக்காலத்தில் விநாயக சதுர்த்தி என்று கூறப்படுகிறது. பூஜை செய்ய வேண்டிய முறை ஆகமங்களிலும், விரத கல்பங்களிலும் உள்ளது.

ஸங்கடஹர சதுர்த்தீ விரதம் :

ஆவணி மாதம் கிருஷ்ண பக்ஷம் சந்திரோதய காலத்தில் வியாபித்துள்ள சதுர்த்தீ திதியில் சந்திரோதய காலத்தில் செய்ய வேண்டிய விரதம். ஏற்பட்ட வீணான அபவாதம் நீங்குதலும், சங்கடங்கள் தொலைதலும் முக்கியமான பயன். இதுவும்

விநாயகரை வழிபடும் விரதமே. பூசையின் முடிவில் விநாயகருக்கும், ரோஹிணியுடன் கூடிய சந்திரனுக்கும் அர்க்யம் கொடுத்தல் வேண்டும். ஸ்கந்த புராணத்தில் செய்யவேண்டிய முறைகள் கூறப்பட்டிருக்கின்றன.

பிரமதேவன் தான் ஏற்றுக்கொண்ட படைப்புத் தொழில் இனிது நிறைவேற சித்தி விநாயக விரதம் செய்து நிவேதனம் செய்த மோதகங்களைக் கையிலேந்திச் சென்ற விநாயகரைச் சந்திரன் பழித்தான். கோபமடைந்த விநாயகர் "சதுர்த்தியில் உன்னைப் பார்ப்பவர் பாபத்தையும் வீண் அபவாதத்தையும் அடைவர்" என்று சந்திரனைச் சபித்தார். பிறகு பிரமதேவனுடைய உபதேசத்தால் சந்திரன் விநாயகரைப் பூஜித்து வழிபட்டான் என்று ஸ்கந்தம் நந்திகேச்வர சம்வாதத்தில் உள்ளது. பிர்ம வைவர்த்த புராணத்தில் புரட்டாசிச் சதுர்த்தியில் சந்திரன் குருபத்னியைச் சேர்ந்தமையால் முற்கூறியவாறு சிவபெருமானால் சபிக்கப்பட்டதாகவுள்ளது.

ஸத்ராஜித் என்ற யாதவன் சூரியனைப் பூஜித்து தினம் எட்டு பாரம் பொன் விளைவிக்கவல்ல ஸ்யமந்தகம் என்ற மணியைப் பெற்றான், துவாரகாபதியான கிருஷ்ணன் அதை விரும்பினான். ஆனால் ஸத்ராஜித் அதைக் கொடுக்கவில்லை. ஒரு சமயம் ஸத்ராஜித்தின் தம்பி ப்ரஸேனன் அம்மணியைக் கழுத்தில் அணிந்துகொண்டு கிருஷ்ணனுடன் வேட்டையாட காட்டிற்குச் சென்றான். காட்டில் அவன் சிங்கத்தினால் கொல்லப் பட்டான். அச்சிங்கத்தை ஜாம்பவான் என்ற கரடி கொன்று மணியை எடுத்துச் சென்று தன் பிள்ளைக்கு விளையாட்டுக் கருவியாகக் கொடுத்தது. இதை ஒருவரும் அறியார். காட்டிலிருந்து தம்பி திரும்பி வாராததைக் கண்ட ஸத்ராஜித் மணியை எடுத்துக்கொள்ள கிருஷ்ணன் அவனைக் கொன்றிருக்கவேண்டும் என்று சொன்னான். ஊராரும் அவ்விதமே எண்ணினர். இந்த அபவாதத்தைக் கேள்விப்பட்டு பொறுக்காத கிருஷ்ணன், காட்டில் குதிரையின் அடிச்சுவட்டைக் கூர்ந்து கவனித்து நடந்தவற்றை ஊகித்து, ஜாம்பவானுடைய குகைக்குச் சென்றான். இருபத்தொரு நாள் ஜாம்பவானுடன் போர்புரிந்து மணியை அடைந்தான். ஜாம்பவானுடைய பெண் ஜாம்பவதியையும் மணந்துகொண்டான். திரும்ப அம்மணியை

ஸத்ராஜித்திடம் கொடுத்தபொழுது அவன் "வீணை அபவாதத்தைக் கிருஷ்ணனுக்கு உண்டாக்கினேமே" என்று வருந்தித் தன் பெண் ஸத்யபாமையைக் கிருஷ்ணனுக்கு மணம் செய்வித்தான். இம்மணியின் நிமித்தமாக உண்டான அபவாதம் சதுர்த்தியில் சந்திர தர்சனம் செய்ததால் கிருஷ்ணனுக்கு உண்டானதாகவும் ஸங்கடஹரசதுர்த்தீ விரதம் செய்து அந்த அபவாதத்தினின்றும் மீண்டதாகவும் ஸ்கந்தம் கூறும். கிருஷ்ணன் ஜாம்பவானுடைய குகைக்குச் சென்றபொழுது,

सिंहः प्रसेनमवधीत्सिंहो जाम्बवता हतः ।
सुकुमारक मा रोदीः तव ह्येष स्यमन्तकः ॥

ஸிம்ஹ ; ப்ரஸேனம் அவதீத் ஸிம்ஹோ ஜாம்பவதாஹத: ।
ஸுகுமாரக மா ரோதீ ; தவ ஹ்யேஷ ஸ்யமந்தக ; ॥

(சிங்கம் ப்ரஸேனனைக் கொன்றது. சிங்கம் ஜாம்பவானுல் கொல்லப்பட்டது. குழந்தாய் அழாதே. உனக்கே இந்த ஸ்யமந்தகமணி) என்று ஜாம்பவதி தன் தம்பிக்குத் தாலாட்டிக் கொண்டிருந்தாள். இக்காலத்திலும் சதுர்த்தியில் சந்திரதர்சனம் செய்தவர் இந்த ச்லோகத்தைச் சொன்னுல் பாபம் நீங்கிச் சுகமடைவர்.

தூர்வா கணபதி விரதம் :

இதுவும் விநாயகரை வழிபடவே. ஸௌர புராணத்தில் சகலவித சௌபாக்கியங்களையும் பெறுவதற்காக ஆவணி அல்லது கார்த்திகை மாதம் சுக்லபக்ஷ சதுர்த்தியில் செய்ய வேண்டியதாகக்கூறப்பட்டுள்ளது. தூர்வா-அருகம்புல் இரண்டு. இரண்டு அருகம் புற்களால் விநாயகரை பூஜிக்கவேண்டும். இவ்விரதத்தில் அர்ச்சனை செய்வதற்கென்று சிறப்பாக பத்து நாமாக்கள் உள்ளன. கணுதிப, உமாபுத்ர, ஏகதந்த, இபவக்த்ர, மூஷிகவாகன, விநாயக, ஈசபுத்ர, சர்வசித்தி ப்ரதாயக, குமாரகுரு, கணேச என்பனவே அவை.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

ஸ்ரீ காலசங்காரமூர்த்தி மண்டபத் திருவாயில்
திருக்கதவுத் திருப்பணியைத் தொடங்கிவைத்து

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய

அருளுரை

15—12—58

அன்பர்களே!

இன்று வெள்ளி வீழாநாள். ஆம்; சிலர்க்குப் புரியாமல் இருக்கலாம். இன்று வெள்ளி விழா நாள்தான். பொன்னுர் மேனியனாய் மாயூரத்தில் பெருமானைக் கண்ட புண்ணிய வசத்தால் வெள்ளிக் கதவுத் திருப்பணி தொடங்குதற்காக இங்கே மெய்யன்பர்கள் கூடியுள்ளார்கள்.

செல்வம் நில்லாத இயல்புடையது. அழியும் தன்மை உடையது. யாக்கையும் அவ்வாறே. அழியும் யாக்கை எமபயம் உடையது. எமபயம் நீக்கவே இங்குப் பெருமான் காலகாலனாய் வீற்றிருக்கிறான். அவன் திருமுன் அழகு செய்யும் கதவை நம்பாலுள்ள நிலையாத செல்வத்தில் ஒரு பகுதி கொண்டு வெள்ளிக் கதவாக்கும் நற்பணியே இத் திருப்பணி. ஆண்டவன் திருவருள் தர வந்த செல்வத்தை அவனருளாலே அவன் திருமுன் கதவாக்கும் தருமம் இது. நல்லகாரியம். இறைவன் திருவருளால் எல்லார்க்கும் இதில் பங்கு இருக்கவேண்டும். அதற்காகத்தான் பலரிடமிருந்தும் திரட்டி இந்த ஒரு அறம் புரியத் திருவருள் அருளிப்பாடு.

உடல் நிலையாது என்ற உணர்ச்சி நமக்கு வேண்டும். நெருநல் இருந்தவன் இன்றில்லை என்பதே உலகின் பெருமை. கிடக்கப்படுத்தவர் கிடந்தொழிந்தாரே என்பது திருமந்திர உபதேசம். ஊரெல்லாம் கூடி ஒலிக்க

அழுவார்கள். பேரினை நீக்கிப் பிணமென்று பேரிடுவார்கள். சூரையங் காட்டிலே கொண்டுபோய்ச் சுடுவார்கள். நீரினில் மூழ்குவார்கள். நினைப்பொழிவார்கள். உலக நிலைமை இது. திருமந்திர விளக்கம். நிலையாத இவ்வுடம்பு இருக்கும்போதே இதுபோன்ற அறங்களைச் செய்துவிடவேண்டும். இன்னம்ப ரீசன் தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று அழுது காமுற்றாரற்றுகின்றாரையும் பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும் எழுதும் கீழ்கணக்குடையவன்.

மனிதன் என்றால் மனம் உடையவன்; நினைப்பவன் என்று பொருள். நினைப்பது அவன் திருவடி ஒன்றேயாகும். திருவருளிருந்தாலன்றி அவன் திருவடி நினைக்கும் பேறு மனிதனுக்குக் கிடையாது. அருளிருந்தால்தான் முயற்சி வெற்றிதரும். யமபயம் நீங்குதற்கும் அக்காலகாலன் திருவடிச் சிந்தனையே வேண்டும்.

அலையும் உள்ளம் அபிராமியன்னையின் தரிசனத்தாலே நிம்மதி அடையும். கனியினும் கட்டிபட்ட கரும்பினும் என்று தொடங்கிய அப்பரடிகள் அனைத்தினும் இனியவன் இறைவன் ஒருவனே என அருளுதல் இங்கே நினைக்கத் தக்கது.

இந்தத் திருக்கதவுத் திருப்பணி எதிர்பாராத ஒரு வாய்ப்பு. இதில் ஈடுபட்டிருப்பவர்களோ நல்ல மனம் உடையவர்கள். அருட்செல்வம் பொருட்செல்வம் இரண்டும் ஒருங்கு வாய்க்கப்பெற்றவர்கள்.

ஸ்ரீ அமுதகடேசன் திருவருள் துணைநிற்கத் திருக்கட வூரில் தொடங்கும் இத்திருப்பணி நலமாக நிறைவேறும் என்பது உறுதி. இதில் ஈடுபட்டுள்ள அனைவரும் நம் வாழ்த்துக்குரியவர்கள்.

காலமுண்டாகவே காதல் செய்துய்மின் தன்னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே'

செய்திகள்

சென்னை சமயப்பிரசார நிலையத்தில் :

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலயத்தில் 31—12—58இல் நிகழ்ந்த சமயப்பிரசார நிலயத்தின் ஐந்தாவது ஆண்டுவிழாவில் சென்னை மாநில முதல் அமைச்சர் கனம் திரு. K. காமராசர் அவர்கள் தலைமையில் திருமதி. T. N. அனந்தநாயகி அம்மையார் B.A., B.L., M.L.A அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.

அரசியல்மேதையாகிய நமது முதலமைச்சர் அவர்கள் சமய ஞான ஒளி பெருக்கும் இப் பிரசார நிலைய ஆண்டு விழாவில் தலைமை வகிப்பது மிகவும் பொருத்தமானதே. பெரியவர்கள் பேசுவதைவிட குழந்தைகள் பேசுவதே மேலானது. அம்முறை யினைக் கையாண்டு இந்நிலையத்தினர் இப்பொழுது குழந்தைகளைக் கொண்டே உரையாடல் மூலம் சமயத்தத்துவங்கள் பலவற்றை விளக்கஞ்செய்தார்கள். திருமுறைகளைப்பற்றியும், அவற்றை அருளிச்செய்தவர்களைப்பற்றியும், திருமுறை அமைப்புப்பற்றி யும் குழந்தைகள் விளக்கமாகக் கூறினார்கள். இவ்வளவு தெளிவாகவும் விளக்கமாகவும் குழந்தைகள் பேசினார்களென்றால் அவ்வளவிற்கும் அவர்களைத் தயார்செய்த இந்நிலையத்தாரின் சேவை நன்கு விளங்குகிறது. நாம் மாலை நேரங்களில் கடற் கரைக்குச்செல்கிறோம். கடற்காற்றினால் உடல் நலம் பெறலாம். சமய நிலையங்களுக்குச் செல்வோமானால் உடல் நலத்தோடு உயிர்நலமும் பெறலாம். அதனை இன்று இந்நிலைய வாயிலாக அனுபவத்தில் காண்கிறோம்.

ஒரு சில சுயநலக்காரர்கள் மடாலயங்களுக்குச் சொத்து எதற்கு என்று கேட்கின்றனர். அறவுணர்வை நம்மிடையே அவ்வப்போதும் தட்டியெழுப்புவதற்கு மடாலயங்களும், அற நெறியைச் சரியான முறையில் பாதுகாப்பதற்குச் சொத்துக் களும் தேவைதான். கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் இவர் கட்கும் மதத் தலைவர்கள் உண்டு. சொத்துக்களும் உண்டு. அஃவற்றை யெல்லாம் அந்தந்தச் சமயத்தவர்கள் போற்றுகின்றார் கள். நமது இந்து மதத்தினர்தான் குறைகூறித் திரிகின்றனர். அது தவறான செயலாகும்.

இந்து மதம் பரந்து விரிந்த சமயம். இதில் இல்லாத கருத்துக்கள் இல்லை. எல்லாச் சமயக் கோட்பாடுகளும் இதில் அடங்கியுள்ளன. எல்லாச் சமயங்களையும் படிமுறையாகத் தன்னிடத்தில் கொண்டு விளங்கும் தாய்மைச் சமயம் இது. உலகியலில் சொன்னால் காங்கிரசைப் போல என்று கூறலாம். ஏனென்றால், ஒவ்வொரு கட்சியின் கொள்கைகளும் காங்கிரசில் அடங்கியுள்ளன. அவற்றுக்கில்லாத சிறந்த கொள்கைகளும் காங்கிரசில் சிறந்து விளங்குகின்றன. இதுபோன்றதே நமது இந்து மதமும். பிற மதக் கோட்பாடுகளையும் தன்னிடத்தே கொண்டு அவற்றிற்கில்லாத தனிச் சிறப்பாக உள்ள கொள்கைகளையும் கொண்டு விளங்குகிறது.

மடாதிபதிகள் எதற்கு என்றும் சிலர் கேட்கின்றனர். ஒவ்வொரு நாட்டிற்கும் லீகல் ரிமம்பிரேன்ஸர் தேவைப்படுவது போல மடாதிபதிகளும் ஒவ்வொரு நாட்டிற்கும் மிகவும் தேவை. லீகல் ரிமம்பிரேன்ஸர் நாட்டில் இயற்றப்படும் சட்டங்கள் ஒன்றற்கொன்று மாறுபடாமல் பார்த்துக்கொள்வார்கள். முரணாகச் சட்டம் இயற்றப்பட்டால் அரசியலாருக்கு அறிவித்துச் சட்டத்தை ஒழுங்குபடுத்துவார்கள். அதுபோலவே தான் ஸ்பிரிசுவல் ரிமம்பிரேன்ஸராக மடாதிபதிகள் ஆத்மீகத் துறைக்கு மிகமிகத் தேவை. மடாதிபதிகள் ஆத்மீகத்துறையில் நன்னெறியினின்றும் பிறழ்ந்து செல்லக்கூடியவர்களை உபதேச வாயிலாகத் திருத்தி நன்னெறியில் நிறுத்த உதவுகிறார்கள். இதற்காக மடாதிபதிகள் ஒவ்வொரு நாட்டிற்கும் அவசியம் தேவைப்படுகிறார்கள்.

தருமபுர ஆதீனம் நல்ல தொண்டுகளைச் செய்துவருகிறது. அதன் கிளையாக உள்ள இப் பிரசார நிலையமும் சென்னைப் பகுதியில் சிறந்த சேவை செய்துவருகிறது. மடாலயங்களின் நல்ல தொண்டிற்கு அரசியலார் ஆதரவுகாட்டவேண்டும். நமது அமைச்சர்கள் உதவிசெய்வார்களென்று நம்புகிறேன்.

ஆண்டுவிழாவில் திரு. ச. சிவகுமாரன் M. A. அவர்கள் (செயலாளர். சைவசித்தாந்தசமாஜம். சென்னை) பேசியதாவது;

" உருவ வழிபாடு மக்களை உயர்நெறியில் செலுத்துகிறது. உருவ வழிபாட்டை இகழ்பவர்களும், நடராஜர் வடிவத்தைப் பார்த்துப் பாராட்டுகிறார்கள். விஞ்ஞானிகள் போற்றுகின்றனர்.

உருவத் தத்துவங்களைச் சாத்திரதோத்திர வாயிலாகத்தான் நன்கு உணர இயலும். அதனை அறிந்தே இங்கிலையம் சாத்திர தோத்திர வகுப்புக்களை இடைவிடாது நடத்துகிறது. இவ் வகுப்புக்களால் பல உண்மைகள் புலனுகின்றன. நமது பழந்தமிழ்ப் பண்பாடு விளங்குகிறது. இத்தகைய தொண்டினை ஆற்றிவரும் இங்நிலையத்திற்கு அரசாங்க ஆதரவு பெருக வேண்டும். அரசாங்கம் சமயச்சார்பற்றதாயிருந்தாலும் பல மக்கள் ஆதரிக்கும் கருத்தை ஜனநாயக அரசாங்கம் ஆதரிக்க வேண்டும். அம்முறைப்படிப் பலருக்கும் நன்மை பயக்கும் இதற்கு ஆதரவுதருவது தவருகாது ''.

திருவெம்பாவை மாநாடு

1—1—'59 இல் சென்னை மாநிலக் கல்வி அமைச்சர் கனம். திரு. சி. சுப்பிரமணியம் B. A. B. L. அவர்கள் தலைமையில் நிகழ்ந்த திருவெம்பாவை திருப்பாவை மாநாட்டில் பாவை வழிபாடுபற்றிப்பேசிய வித்துவான் திரு. தி. முத்துக்கண்ணப்பர் B. A. M. L. C அவர்கள், ' ஆஸ்திகம் நாட்டில் இன்றளவும் நிலைத்திருப்பதற்குக் காரணம் பெண்மணிகள்தான் என்றும், நாஸ்திகர்கள் நலமாக வாழ்வதற்கும் காரணம் அவர்களது மனைவிமார் கடவுளை வழிபடுவதுதான்' என்றும் கூறினர்கள்.

திருவெம்பாவை முற்பகுதிபற்றிப்பேசிய திருமதி.சௌந்தரம் கைலாசம் அவர்கள் "ஒருநாமம் ஒருருவம் ஒன்றும் இல்லா இறைவன் பல உருவங்களும் பல பெயர்களும் தாங்குவது பலதரப்பட்ட உயிர்களையும் கரையேற்றுவதற்காகத்தான் என்றும் திருவெம்பாவை முற்பகுதியில் எட்டுப் பாடல்கள் ஒருவரை யொருவர் எழுப்புவதையும், அடுத்து இரண்டு பாடல்களில் சங்கற்பம் செய்தல் பரத்துவங்கூறல் முதலியவற்றையும் காணலாம் '' என்றும் கூறினர்கள்.

2—1—59 இரண்டாம் நாள் விழாவிற்குத் தலைமை வகித்த திரு. ஓ. வி. அளகேசன் அவர்கள் பேசியதாவது;

"இப்பொழுது சமயமறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. சமீப காலத்தில் போலிப் பகுத்தறிவு வாதிகளால் பரிகசிக்கப்பெற்ற உணர்வு போற்றப்பெறுகிறது. அவர்களே கடவுளை இல்லை

என்றுநாங்கள் சொல்லவில்லையே என்று பேசுகின்றனர். நாத்திகம் அஸ்தமித்துவிட்டது. சமய மறுமலர்ச்சி என்னும் சூரியன் உதயமாகிவிட்டது.

மனித வாழ்விற்கு அறம் அவசியம். அவ்வறம் நிலைத்து நிற்க வேண்டுமானல் கடவுள் நம்பிக்கையும், பக்தியும் இன்றியமையாது வேண்டப்பெறும். அறிவால் அறத்தை நிலைநிறுத்த இயலாது. பேரறிவாளிகளுக்கும் தவருன மற உணர்வு எழுவதைப் பார்க்கிருேம். எனவே தேய்வபக்தியில்தான் அறநெறி நிலைத்து மக்கள் வாழ்வு மலரமுடியும்.

தேய்வ பக்தியால் செல்வவளம் உயர்ந்திருக்கிறது. சமீபத்தில் சனிப்பெயர்ச்சிக்காக திருநள்ளாறு சென்றிருந்தேன். சிதம்பரம் தரிசனத்திற்கும் சென்றேன். ஐந்து வருடங்களாக இல்லாத பெருங்கூட்டத்தைக் கண்டேன். சமய மறுமலர்ச்சி தோடங்கிவிட்டதை அறிந்தேன். இப்பக்தியால் மக்கள் வாழ்வு உயர்ந்திருப்பதையும் கண்டேன். ஐந்து வருடங்களுக்கு முன் அதேதரிசனத்தில்நூல்புடவை கட்டிவந்தவர்கள், பட்டுப்புடவை கட்டி வந்து தரிசிக்கிருர்கள். எனவே செல்வவளம் இப்பொழுது குறைவு என்று சொல்லுவதற்கு இல்லை. தில்லையில் செல்வ நேடுமாடங்கள் ஓங்கி இருந்ததை சம்பந்தர் பாடலால் அறிகிருேம். எனவே வாழ்விற்கு அறமும் அறத்திற்குத் தேய்வ நம்பிக்கையும், தேய்வ பக்தியால் வாழ்வில் வளமும் ஏற்படுகிறது என்பது பேறப்படுகிறது.

திருவேம்பாவை பிற்பகுதி பற்றிப் பேசிய சேந்தமிழ்ச் செல்வர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், ''விடியற்காலையில் நீராடி இறைவனை வழிபடுவதால் உடல் நோய், உளநோய், உயிர்நோய் முதலியன நீங்குகின்றன. இந்நன்மைகளைக் கருதித்தான் நமது முன்னுேர்கள் மார்கழி நீராடலை விழாவாகக் கோண்டாடி வந்துள்ளார்கள். திருவேம்பாவைப் பிற்பகுதியில் பெரும்பகுதி நீராடற் சிறப்பும், இறைவனை வழிபடும் நிலையும் கூறப்பெறுகின்றது. உங்கையிற் பிள்ளை என்ற பத்தோன்பதாவது பாடலில் அங்கு ''அப்பழஞ்சோல்'' என்றது பழமையான வேதத்தைக் குறிக்கின்றது'' என்று குறிப்பிட்டார்கள்.

குமாரி இந்திரா குழுவினர் ''மணிவாசகர்'' பற்றி இன்னிசைக் கதாகாலட்க்ஷேபம் நிகழ்த்தினர்.

3—1—59. மூன்றும் நாள் விழாவிற்குத் தலைமைதாங்கிய சென்னை நகர மேயர் திரு. K. கமலக்கண்ணன் அவர்கள் தமது தலைமை உரையில் 'மானிடப் பிறவி கிடைப்பது அரிது. கிடைத்தாலும், கூன், குருடு, செவிடு ஊமை நீங்கிப் பிறத்தல் அரிது. இப்படிக் கிடைத்த பிறவியை வீணுக்காமல் பரமனிடத்தில் பக்தி செலுத்திப் பிறவாவரம் பெறுவதே மக்கள் கடமையாகும். அறிவினுல் ஆக்கம் காண இயலாது. பக்தி தான் மக்களை நன்னெறிப்படுத்தி ஆக்கத்திற்கு ஆளாக்கும். மார்கழி மாதம் முப்பது நாளும் இந்நிலையத்தார் வீதி பாராயணம் நிகழ்த்துவது பாராட்டத்தக்கது. குலமே பெரிதென வாதமிடுதல் கூடாது. குணமேதான் பெரிது. இதற்குச் சான்ருக சைவத்தில் நந்தனுரும், வைணவத்தில் திருப்பாணுழ்வாரும் விளங்கு கின்றனர். சாதிக்கட்டுப்பாட்டால் இந்துக்களில் பலர் பிறமதம் புகுகின்றனர். எனவே இக்காலநிலைக்கேற்ப மக்கட்கு அறி வுரை கூறவேண்டியது அவசியமாகிறது. இத்துறையில் இந் நிலையத்தார் செய்துவரும் சேவை மிகவும்போற்றத்தக்கதாகும்'' என்று அறிவித்தார்கள்.

திருப்பாவை முற்பகுதி பற்றிப்பேசிய திருமதி R. சரோஜினி அம்மையார் "திருப்பாவையில் முதல் ஐந்து பாடல்கள் முன்னுரையாக அமைந்துள்ளன. அடுத்த பத்துப் பாடல்கள் ஆழ்வார்களைத் துயில் எழுப்புவதாக அமைந் துள்ளன. 15ஆம் பாடல் முதல் 25ஆம் பாடல் முடிய உள்ள பாடல்கள் நாயகனுய் நின்ற நந்தகோபனை எழுப்புவதாக அமைந் துள்ளன. பின்னுள்ள ஐந்து பாடல்கள் முடிவுரையாக அமைந் துள்ளன " என்று குறிப்பிட்டார்கள்,

"பாவைநோன்பு" பற்றிப் புலவர் திரு. N. R. முருகவேள் பேசும்போது "கன்னிப்பெண்கள் தங்களுக்கு நல்ல கணவன் மார்களையும், நாட்டிற்கு நல்லமழை வளத்தையும் வேண்டி, கார்த்தியாயினி என்று பேசப்பெறும் கெளரி அம்மையை நுண் மணல் வடிவத்தில் ஆவாகனம் செய்து வழிபடுவதே பாவை நோன்பாகும் என்றும், ஆனுல் இப்போழுது பாவைமார்கள் கோண்டாடுவது பாவைநோன்பு என்று கருதியும் கூறியும் வருகின்றனர்; அது போருந்தாது என்றும் திருவெம்பாவையும், திருப்பாவையும், பிரபந்தவகையைச்சார்ந்த தனி நூல்கள் என்றும் " குறிப்பிட்டார்கள்.

திருமதி. C. N. இராஜலக்ஷிமி அம்மையார் குழுவினர் திருப்பாவை இசையரங்கு நிகழ்த்தினர்.

4—1—'59. நான்காவது நாள் நிறைவு விழா, சென்னை முன்னாள் அறநிலைய அமைச்சர் திரு K. வேங்கடசாமி நாயுடு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது தலைமை யுரையில் கூறியன:— "தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் மிகுந்தவாத்சல்யம் உடையவர்கள். பல நற்காரியங்களை அவர்கள் வந்ததுமுதல் செய்து கொண்டே இருக்கிறார்கள். அவற்றுள் இங்கு இந்தப் பிரசார நிலையம் வைத்திருப்பது மகத்தான காரியம். இடைவிடாமல் நல்ல பிரசாரங்கள் இங்கு நடந்துகொண்டே யிருக்கின்றன. சென்னை மக்களுக்கு இது ஒரு பாக்கியம். ஆண்டாள் அம்மையாரும், மாணிக்கவாசகரும் பக்தியைப் பெருக்க இவ்விரு நூல்களையும் இயற்றினார்கள். அப்பாடல்களைக்கொண்டு இப்பொழுது பக்திப் பிரசாரம் செய்து வருகின்றனர். நாடு முழுவதும் இது ஒருநல்ல அறி குறி. நாடுசெழிக்க பக்தியும் பிரசாரமும் மிக அவசியம்". என்பன.

"மணிவாசகர் மாண்பு" பற்றிப்பேசிய திரு. கீ. இராமலிங்க முதலியாரவர்கள், "அமைதி இறைவழி பாட்டில்தான் அமைந் துள்ளது. ஆலயம் என்ற சொல்லே இதனை நன்கு விளக்கு கிறது. ஆன்மா ஒடுங்குவதற்குரிய இடம் என்பது ஆலயம் என்ற சொல்லின் பொருளாகும். மணிவாசகர் விளையாட்டில் வைத்தே பல தத்துவக் கருத்துக்களை விளக்கியுள்ளார். காலையில் எழுந்து நீராடுவதால் மனத்திற்குத் தெளிவும், உட லுக்கு விருவிருப்பும் உண்டாகின்றது "என்று அறிவித்தார்கள்.

"சங்கத்தமிழ்மாலை" என்பது பற்றிப் பேசிய தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர் திரு. க. வச்சிரவேல் முதலியாரவர்கள் "முதல், இடை, கடைச்சங்கங்களால் வளர்க்கப்பெற்ற சிறப் புடையது தமிழ்மொழி என்றும், சங்கங்களின் தலைவர்கள் இறைவனும் அவனது அருள்வழிப்பட்டோருமாவார்கள் என்றும் தமிழ்மொழியில் உள்ள எந்த நூலைத்தொட்டாலும் தெய்வ மணங் கமழ்கிறதென்றும் அவற்றுள்ளும் நாயன்மார்களும், ஆழ்வார்களும் அருளிச்செய்தவை சிறப்புடையனவென்றும், ஆண்டாள் அம்மையார் அருளிய திருப்பாவையின் இறுதிப் பாடல் பலன் சொல்வதாக அமைந்துள்ளது என்றும், அதில்

திருப்பாவையைச் “சங்கத்தமிழ்மாலை” என்று குறிப்பிட்டுள்ளமை அடியார் கூட்டத்திலிருந்து வெளிவந்தமையைக் குறிக்கிறது” என்றும் கூறினார்கள்.

நிலையத் திருமுறை வகுப்பு மாணவமாணவியர்களால் “குறவஞ்சி” என்ற இசைநாடகம் நடிக்கப்பெற்றது.

ஒவ்வொருநாளும் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறி மாநாட்டை உடனிருந்து நிகழ்த்தினார்கள். நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் P. சுவாமிநாதன் அவர்களால் நாள்தோறும் கடவுள் வணக்கப் பாடல் முதலியன பாடப்பெற்றன.

தருமபுர ஆதீனத்தில்:

தருமபுர ஆதீனத்தில் சந்தானாசாரியர் சமயாசாரியர்கள் பெயரில் கட்டப்பெற்றுள்ள வரிசையில் திருநாவுக்கரசர், சுந்தரர் பெயர்களில் அமைந்த புதிய கட்டடமாகிய நிலயங்களை, விளம்பி யாண்டு மார்கழித்திங்கள் 10ம் ஆம் நாள் (25-12-58) வியாழக் கிழமை காலை 11½ மணிக்கு, சென்னை மாநிலக் கல்வி-நிதி அமைச்சர், கனம். உயர்திரு. சி. சுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்கள் திறந்து வைத்தார்கள். கனம் அமைச்சர் அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளிய அருளுரையை ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் (சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை) வாசித்து அளித்தார்கள்.

தருமபுரம் ஆதீனக் கல்வி நிலையங்களிலுள்ள (ஆதீனப் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகம், ஆதீனம் உயர்பள்ளி ஸ்ரீ வாகீசர் மாணவர் கழகம், ஆதீனம் உயர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகம், ஆதீனம் வேத சிவாகம பாடசாலைக் கலைமகள் கழகம், ஆதீனத்தேவாரபாடசாலை நால்வர் நற்றமிழ்க் கழகம்) கழகங்களின் சார்பில் வரவேற்பு ரையை வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் வாசித்தளித்தார்கள்.

கனம், அமைச்சரவர்களது திறப்புரைக்குப் பின்னர், செஞ் சொற்கொண்டல், வித்துவான், திரு. சோ. சிங்காரவேலனு

'பாவை விருந்து' என்ற தலைப்பில் திருப்பாவை - திருவெம்பாவை களிலுள்ள சிறந்த கருத்துக்களை எடுத்துக்கூறினார். ஆதீனப் பல்கலைக்கல்லூரிப் பிரின்ஸிபால் திரு. முத்து. சு. மாணிக்க வாசக முதலியார் அவர்கள் நன்றி நவின்றார்கள். நாட்டு வாழ்த் டன் திறப்புவிழா இனிது நிறைவெய்தியது.

ஆதீன தேவஸ்தானங்களில் :

திருக்கடவூரில் வெள்ளிக்கதவுத் திருப்பணி

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்த மான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத் தில் கார்த்திகைச் சோமவாரங்களில் திருக்கடவூரில் சிறப்பு வழிபாடு நிகழ்வதை யாவரும் அறிவர். இவ் யாண்டும் கார்த்திகைச் சோமவாரங்களில் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமிக்கு 1008 சங்காபிஷேகமும் அலங்கார ஆராதனைகளும் மிக்க சிறப்போடு நிகழ்ந்தன. சோமவார நாட்களில் ஆதீன சமயப் பிரசாரகர்களால் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன.

விளம்பி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 30-ஆம் நாள் 15-12-58 கடைசிச் சோமவாரத்தன்று ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி மண்டபத் திருவாயில் வெள்ளிக்கதவுத் திருப்பணிக்காக அமைந்த குழு தன் பணியைத் தொடங்கியது. அன்று வழிபாட் டிற்கு எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வெள்ளிக்கதவுத் திருப்பணிக்குழுவினருக்கு ஆசி அருளி, திருப் பணியைத் தொடங்கிவைத்துத் திருப்பணிக்காகப் பெருந் தொகையும் வழங்கியருளினார்கள்.

திருநள்ளாற்றில் :

தங்கக்கவசத் திருப்பணி

திருநள்ளாறு ஸ்ரீதர்ப்பாரண்யேசுவரசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ சனி பகவானுக்கு 24-12-58ல் விசேஷ அபிஷேக ஆரா தனைகள் நடந்தன. அன்று சனிப்பெயர்ச்சித் திருநாள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளியிருந்து வழிபாடுகள் நிகழ்த் தினார்கள். மக்கள் கூட்டம் மிகுதியாக இருந்தது. ஏழைகளுக்கு எண்ணெய் அளிக்கப்பட்டது. அன்னதானம் நிகழ்ந்தது. ஸ்ரீசனி பகவானுக்குத் தங்கக் கவசத் திருப்பணியை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் தொடங்கிவைத்து அருளுரை வழங்கி, முதல்

முதலாக ரூ. 1019 வழங்கியருளினார்கள். ' சத்திவிலாசம் ' பஸ் உரிமையாளர், திரு. வீரப்பப் பிள்ளை அவர்கள் 1001 ரூபாயும். திருநள்ளாற்றுத் திருக்கோயிலின் பொருளாளர் திரு. ஷண்முக நாதன் அவர்கள் 500 ரூபாயும் கொடுத்தார்கள் மற்றும் பல அன்பர்களும் அன்று அப்புண்ணியத்தில் பங்குகொண்டார்கள்.

திருவெம்பாவை - திருப்பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்த மான தேவஸ்தானங்களில் ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் நடைபெறுகின்ற திருவெம்பாவை மாநாடு இவ்யாண்டும் திருக் கடவூர், திருப்பறியலூர், விளநகர். மாயூரம் குமரக்கட்டளை, ஸ்ரீ விசுவநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீ வள்ளலார்கோயில், திருமுல்லைவாசல், தலைஞாயிறு, ஆச்சாள்புரம், திருபுவனம், திருப்பனந்தாள், பேரளம், குத்தாலம், திருக்குவளை, மலைக் கோட்டை (ஸ்ரீ தாயுமானவர்கோயிலில் மௌனமடம் சார்பில்) உய்யக்கொண்டான் முதலிய ஊர்களில் சிறப்பாக நடைபெற்றது

9—1—59 வெள்ளிக்கிழமையன்றுமாலை திருவெம்பாவை - திருப்பாவை மாநாடு சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ் தானத்தில் மிக்க சிறப்போடு நிகழ்ந்தது. மாநாடு சென்னை மாநில அறநிலைய ஆணையர் திரு. A. உத்தண்டராமப் பிள்ளை B. A , B. L., I. A. S. அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. அவர் களுக்கு சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானச் சார்பில் வரவேற்புரையொன்று வாசித்தளிக்கப்பட்டது. அறிஞர்கள் பலர் சொற்பெருக்காற்றினார்கள். மாலை யானைமீது திருமுறைகள் பண்ணிசை முழக்குடன் திருவீதியுலா வந்தது.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 9-1-59 மாலை சென்னை மாநில அறநிலைய ஆணையர் திரு. A. உத்தண்ட ராமப்பிள்ளை B. A., B. L., I. A. S. அவர்கள் திருவெம்பாவை திருப்பாவை மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள். மேலும் அங்குப் புதியதாகக் கட்டப்பெற்ற பசுமடம், நூல் நிலையம் இவற்றையும் திறந்துவைத்து அறிவுரைகள் வழங்கினார்கள். வேளூர் தேவஸ்தானச் சார்பிலும், வேளூர் இந்து அநாதாஸ்ரமச் சார்பிலும் வரவேற்புரைகள் வாசித்து அளிக்கப்பெற்றன.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிரம்மஸ்ரீ கே, முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(விளம்பிஸு தைமீ 1உ முதல் 30உ முடிய)

(14—1—59 முதல் 12—2—59 முடிய)

உத்தராயண மகரஸங்கராந்தி புண்ணியகாலம் தைமீ 12உ புதன்கிழமை காலை 10 நாழி 32 விநாடியளவில் மீன லக்கினத்தில் சூரியன் மகர ராசியில் பிரவேச சுப முகூர்த்தம் ஏற்படுவதால் உலகில் தனதான்ய விருத்தியாகி, பிரஜைகள் சந்தோஷகரணமான வாழ்க்கையை நடத்திக்கொண்டு நித்திய மங்களுடன் சுகஜீவனத்தை ஸ்ரீ சூரிய பகவான் அருள்புரிவாராக. லோகாஸ்ஸமஸ் தாஸ்ஸுகினோபவந்து.

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி நான்கு பாதங்களும் சந்தோஷகரமாய் நடக்கும் விவசாய விருத்தியாகும். பரணி நான்கு பாதங்களும் நஷ்ட தனம் வந்துசேரும், உத்தியோக உயர்வும், இடம் மாறுதலும் ஏர்ப்படும். கார்த்திகை முதல் பாதம் ரோகத்தையும் கடனையும் உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் மிச்ரமாய் நடக்கும் வித்யா விருத்தியாகும். உத்யோக உயர்வுடன் இடம் மாறல் ஏற்படும், அதிக சிலவினங்களும், சிறு நஷ்டங்களும் உண்டு பண்ணும். ரோகிணி நான்கு பாதங்களும் உத்தியோக லாபத்தையும் உயர் பதவிகளையும் மேலோர் அன்பையும் தரும், மிருகசிர்ஷம் 1, 2 பாதங்கள் வீண் அலைச்சல், திருட்டு பயம், தொழில் நஷ்டம் குடும்பகலகம் இவைகளைத்தரும், புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்களும் சுபமாயும், மங்களமாயும் நடக்கும். திருவாதிரை நான்கு பாதங்களும் சுபமாகும் ஆரோக்கியமும் ஐசுவரியமும் தரும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் விசேஷ லாபத்தையும் சத்துருமைத்திரத்தையும் வாகன யோகங்களையும், புத்திராதிகளால் சந்தோஷத்தையும் மங்களகாரியங்களையும் உண்டுபண்ணும். சனி. சேவ்வாய் சுபமாகும்.

4: கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4-ம் பாதம் மகாவைபவகாரணமானதாகும் தூர பிரயாணமும் பேரியோர் அன்பும் ஏற்படும். பூசம் முதல் பாதம் மீச்ரமாய் நடக்கும். பூசம் 2, 3, 4 பாதங்கள் கீர்த்தியையும் சத்துரு நாசத்தையும் தரும். ஆயில்யம் நான்கு பாதங்களும் சம்பூர்ண தேய்வ பலத்தோடு பிரகாசிக்கும் கடன் நீங்கும் கவலை விலகும், சுபமுண்டாகும், வியாழன், வேள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் சுப பலனைத்தரும் உத்தியோக லாபத்தோடு இடம் மாறும். பேரியயோர் அன்புகிட்டும், சந் தோஷம் உண்டாகும். பூரம் நான்கு பாதங்களும் சிறு நஷ்டங் களும் கவலையும் காட்டும், அதிக விரயம் ஏற்படும். உத்திரம் முதல் பாதம் சத்துருக்களையும் கடனையும் தரும். தோழில் பங்கம் ஏற்படும் மனம் பீதியடையும் சனி, சேவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3. 4 பாதங்கள் சுபசந்தோஷத்தையும் தூரபந்துக்கள் ஏற்படுவதையும்உண்டாக்கும், லாபம்கிடைக்கும் தோழில் ஓங்கும், ஹஸ்தம் நான்கு பாதங்களும் சுபமாகவே நடக்கும், தூரபிரயாணம், பேரியோர் அன்பு, நிதி தனம் போல் தனம் கிடைத்தல் இல்லற சுகபோகங்கள் உயர் பதவிகள் கீர்த்தி ஆரோக்கியம் எல்லாம் மேன்மேலும் விருத்தி யாகும். சித்திரை 1, 2 பாதங்கள் நூதன உத்தியோக

லாபத்தையும் கட்டட வேலைகளையும் பந்துமித்திரர்களால் பூஜிக்கும் தன்மையும் ஏர்ப்படச்செய்யும் புதன், சனி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் சுபமிராமி, கவலை அதிகமாகும் சுவாதி நான்கு பாதங்களும் சந்தோஷம் உண்டுபண்ணும்- வெகு காலமாய் எதிர்பார்த்து நடைபெருத காரியங்கள் ஜயத தோடும் லாபத்தோடும் பூர்த்தியடையும் வெகுமானங்களும் கீர்த்திப்பத்திரமும் கிடைக்கும் விசாகம் 1, 2, 3 பாதங்கள் குடும்பத் தொல்லையோடும் கடன் பளுவுடனும் கவலையோடும் போய்க்கொண்டிருக்கும் சனி, செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் நாலாம் பாதம் சுபமிராது. கஷ்டநஷ்டங்களைத் தரும். ஆனுலும் தெய்வ பலம் காக்கும். அனுஷம் நான்கு பாதங்களும் இடம் மாறி ஜயத்தையும் லாபத்தையும் தரும் உலக பிரசித்தியாகும். கேட்டை நான்கு பாதங்கம் இடம் மாறி சுபமறியச்செய்யும் ஆரோக்கியமும் இல்லற சுகமும் தனவிருத்தியும் ஏற்படும். புதன் வெள்ளி சுபமாகும்-

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் மீசிரமாய் நடக்கும். பூராடம் நான்கு பாதங்களும் சப சந்தோஷங்களைத் தரும். உத்தி யோகம் உயரும், மேல் பதவி ஏற்படும் விவசாயத்தில் லாபம் அதிகம் கிடைக்கும், தெய்வ பலம் ஓங்கும். உத்திராடம் முதல் பாதம் குடும்ப சுகத்தையும் ஆடையாபரணச் சேர்க்கை களையும் ஆரோக்கியத்தையும் தரும் சந்தோஷமுண்டாகும். புதன் வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம். $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3. பாதங்கள் வீண் அலைச்சலையும் விரோதங்களையும் உண்டுபண்ணும் திருவோணம் முதல் பாதம் அசுபசமாசாரச் செய்திகள் ஏற்படச்செய்யும் திருவோணம் 2, 3, 4 பாதங்கள் லோக பூஜ்யதைகளையும் சபாஞ்ஜகத்தையும்

போது ஜனங்களுடைய ஆதரவையும் பெரியோர் அன்பையும் உண்டுபண்ணும். அவிட்டம் 1, 2 பாதங்கள் வெகு பிரயாசை யோடு காரிய சாதனங்களும் வெற்றியும் உண்டுபண்ணும் உயர்பதவிகளும் இடம் மாறலும் ஏற்படும் புதன் வியாழன் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் இல்லற சுகத்தை தரும் தூர பிரயாணம் ஏற்படும், கடன் நீங்கி சுபமுண்டாகும். சதயம் நான்கு பாதங்களும் பதவி பங்கத்தையும் அவமானச் சொல் கேழ்விகளையும் தரும் மனம் கலங்கும் பூரட்டாதி 1, 2 3 பாதங்கள் இல்லற சுகத்தை தரும் குடும்பய் ஓங்கும் புத்திராதிகளால் சந்தோஷமுண்டுபண்ணும். நஷ்டமானபொருள் வந்துசேரும். புதன் சனி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி நாலாம் பாதம் சுபமிராது கவலையை தரும் உத்திரட்டாதி நான்கு பாதங்களும் சந்தோஷத்தை உண்டு பண்ணும். தனதான்ய லாபம் ஏற்படும் உத்தியோகத்தில் நன் மதிப்பும் கீர்த்தியையும் தரும் ரேவதி நான்கு பாதங்களும் நல்லோர் பெரியோர் அன்பைத்தரும் தெய்வ பலமிருக்கும் புத்திராதிகளால் சுகமுண்டாகும் தொழில் ஓங்கும் ஆரோக்கியம் ஏற்படும் சந்தோஷமடையும் சனி செவ்வாய் சுபமாகும்,

குறிப்பு:— ஷ தான்ய விருத்தியாகும் ஈதிபாதைகளால் சிற்சில இடங்களில் தான்யங்களும் சேதம் உண்டாகும் விலை வாசிகள் குறைந்து வரும் வடதேசத்தில் அமைதி குறையும் கடவுள் இருந்து உலகத்தை அமைதியாய் ரக்ஷிப்பாராக.

சுபம்

தருமபுரம் ஆதீனம்

திருவாரூர் இராஜன்கட்டளை பசுமடத்து பசுக்கள்

இரண்டு பரிசுபெற்றன

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவாரூர் முனிசிபல் எல்லேக்குள் நல்ல கறவை உள்ள பசுக்களுக்கு இரண்டு பரிசுகள் வழங்க மூலதனம் ஒன்று ஏற்படுத்தி அதன் வட்டி வருவாயிலிருந்து கொடுக்க ஏற்பாடு செய்து முனிசிபல் சேர்மன் அவர்கள் துவாராவாக நடத்தத் திட்டமிட்டு நடந்து வருகிறது. அவ்விதம் உள்ள பரிசுத் திட்டம் 1958ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் நடந்ததில் தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான திருவாரூர் இராஜன் கட்டளையில் சென்னை அறநிலைய கமிஷனர் ஸ்ரீ உத்தண்டராமபிள்ளை B.A., B.L., I.A.S. அவர்கள் அபிப்ராயத்தின்பேரில் ஷை கட்டளை பரம்பரை தருமகர்த்தா தருமபுரம் ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் நடத்தப்பட்டுவரும் பசுமடத்தில் உள்ள பசுக்களில் இரண்டு பசுக்கள் முதல் பரிசும், இரண்டாவது பரிசும் பெற்றிருக்கின்றன.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam

Sri Amirthakateswaraswamy Devasthanam

Tirucadaiyur (Mayuram Tk.)

தருமையாதீனத்தின் அருளாட்சியில் அமைந்த திருக்கடவூரை சைவத் தமிழுலகம் நன்கு அறியும். காலனை மார்க்கண்டற்காக காய்ந்த கடவுளின் கருணையைக் காட்டும் இத்தலத்தை இன்று வழிபடும் பேறுபெற்றேன். திருக்கடவூர் கோயிலைக் கண்ணும் கருத்துமாய்ப் புரக்கும் தருமை ஆதீனம் பல்லாண்டு சிறப்புற்று வாழ்க.

(Sd.) ரா. பி. சேதுப்பிள்ளை,
(Sd.) S. நடராஜ நாடார்,
30—5—58.

மதிப்புரை

போற்றிப்பஃறொடை ஏற்புக் கட்டுரை

திருவாவடுதுறை ஆதீனம் 21 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களது ஆணையால் வெளிவருவது. கட்டுரை ஆசிரியர்: திருவாவடுதுறை ஆதீன வித்துவான், திரு. தே. ஆ. ஸ்ரீநிவாசாசாரியார் அவர்கள். பக்கங்கள் 170.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்று இந்நூல். இந்நூல் ஆசிரியர் உமாபதி சிவாசாரியார். சைவ சித்தாந்த சாத்திரங்களை எளிய உரைநடையில் கட்டுரைகளாக வெளியிட்டருளுகின்றது சைவ சித்தாந்த சாத்திரங்களின் கருவூலமாக விளங்கும் துறைசையாதீனம். இந்நூல்களை எளிய நடையில் பல பல உரையாசிரியர்களின் உரைகளையும் தழுவி எழுதி சைவ உலகிற்குப் பெரும்பணி செய்கின்றவர் திரு. ஸ்ரீநிவாசாசாரியார் அவர்கள். இந்த ஞான நூலின் பொருளைப் பதினைந்து தலைப்புக் களில் விளங்கச் செய்கிறது கட்டுரை நூல். இது சிறந்த தெய்வத் தமிழ்ப்பணி.

வி, சா. குருசாமி.

மூகபஞ்ச சதீ

இது வடமொழியில் ஸ்ரீமூக கவியால் இயற்றப்பட்ட காஞ்சி காமாக்ஷியின் ஸ்துதி, ஆர்யா (ஒருவகை வடமொழிச் செய்யுள்) பாதாரவிந்தம், மந்தஸ்மிதம், ஸ்துதி, கடாக்ஷம் என்ற ஐந்து சத கங்கள் இதில் இருப்பதால் பஞ்சசதி எனப்பெயர்பெறும், இதில் மந்த ஸ்மித சதகத்தையும்; பாதாரவிந்த சதகத்தையும் முறையே திரு முறுவல் நூறு, திருவடித்தாமரை நூறு என்ற பெயரில் கவியரசு, வித்துவான். திரு. கு. நடேச கவுண்டர் செய்யுளாகவே மொழிபெயர்த் துள்ளார். இவற்றுள் முன்னது ஒரேவகைச் செய்யுளாலும், பின்னது சிலவகைச் செய்யுளாலும் ஆயின. வடமொழி மூலத்திலுள்ள சிலேஷை முதலிய அணிகளும் மொழிபெயர்ப்பில் இடம் பெற்றிருப் பதும், பின்னுள்ள குறிப்புரையும், T. H. விவேகானந்தம் பிள்ளை B. A. L. T. இறைபணியாளர் எழுதிய முன்னுரையும் மிகவும் போற்றற்குரியன, பல நூல்களியற்றி, மொழிபெயர்த்துமுள்ள இவ் வாசிரியரது தமிழ் வடமொழிப் புலமை இந்நூலால் விளங்குகிறது. குறுநகை ஒன்றனையே குறித்த இந்நூல் தமிழ் வளர்ச்சிக்கும் காரணமாகும், இம்மாதிரி மொழிபெயர்ப்பு இருமொழிக்கும் செய்யும் ஒரு தொண்டாகும். மக்கள் படித்துத் துதித்து அம்பிகையின் அருளைப்பெற சிறந்த சாதனமாகும் இது. விலை 75 நயே பைசே. 6/51, காந்திபுரம் 4-வது தெரு, கோயமுத்தூர் என்ற விலாஸத்தில் ஆசிரியரிடம் கிடைக்கும்.

K. Rajagopala Sastri.

மதிப்புரை

சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்

(தலமுறை)

குறிப்புரை: செந்தமிழ்ச்செல்வர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் எம். ஏ., 'கலைமகள்' ஆசிரியர், சென்னை. குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம் வெளியீடு விலை ரூ. 1-30, பக்கங்கள் 320.

திருப்பனந்தாள் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் புரிந்துவரும் அறப்பணிகள் இமயமுதல் குமரி வரை இருந்து பயன் விளைத்து வருகின்றன. அவை புத்தகம், கல்வெட்டு அன்னம்பாலிப்பு, சமயம், சமுதாயம் என்று பலதிறப் பட்ட தொண்டுகளாகும். இது தெய்வத் தமிழ்த் திருப்பணி. பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதியிலிருந்து இந்நூல் வெளிவரு கிறது. நம்பியாரூரரின் செந்தமிழில் தோய்ந்து சுவைத்து இன்புறும் திரு. கி. வா. ஜ. அவர்கள் தம் இன்பத்தை ஆங்காங்குக் குறிப்புரை யாக்கிக் கொடுத்துள்ளார்கள். உரிய இடங்களில் மேற்கோள்களும் அழகு செய்கின்றன, தக்க இடங்களில் பாடபேதம் காட்டி, அவற்றின் பொருள்களையும் புலப்படுத்தியுள்ளார்கள். வினைமுடிவு இனிது விளங்காத திருப்பாடல்களில் எளிதாக வினைமுடிவும் காட்டி உதவியிருக்கிறார்கள். பாடல்கள் நன்கு கண்ணுக்கு விருந்தாம் வண்ணம் பிரிக்கப்பட்டுப் பொருள் விளக்கம் தருகின்றன. ஒவ்வொரு பதிகத்தினிறுதியிலும் அவ்வவற்று வரலாறும் தரப் படுவது படிப்போர்க்கு நற்றுணையாய் உள்ளது. சைவ உலகுக்கு இத்தகைய அரிய தேவாரத்தை எளிய உரையோடு தந்துள்ள ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளுக்குத் தமிழகம் கடமைப் பட்டுள்ளது. குறிப்புரை யாசிரியர்க்கும் அறிவுலகம் தன் நன்றியைப் புலப் படுத்துவதாகும். அனைவரும் இந்நூலை வாங்கி ஓதிப் பயன்பெற வேண்டுகிறோம்.

சோ. சிங்காரவேலனார்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—1—59.